[illegible]

10

18-4-1935

[illegible]
[illegible]
N35:210
908726

695

695

ூ. 3 Regd. No. M. 24



OFFICE OF THE REGISTRAR
8-MAY 1935
MADRAS

# மாத்வ மித்திரன்.

# THE MADHWA MITRAN.

EDITOR:
**Adyam Bhagavatha Ranganathachariar,**
**KUMBAKONAM.**

பௌர்ணமிதோறும் வெளிவரும்



| Vol. 7 | யுவ ஸம்வத்ஸரம் | No. 10. |
|---|---|---|
| புஸ்தகம் 7 | சைத்ர மாஸம். பௌர்ணமி (18-4-35) சோமவாரம். | நெ. 10. |



| நெ. | பொருளடக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | தாத்பரிய நிர்ணயம் (மத்வாசாரியார்) | 28 |
| 2. | ஆசாரமாலே. | 296 |
| 3. | ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதா சாரியார்) | 300 |
| 4. | மகாலட்சுமி. | 304 |
| 5. | ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம் | 308 |
| 6. | விரத மகாத்மியக் குறிப்பு. | 311 |
| 7. | செய்தித்திரட்டு. | 317 |
| 8. | விசேஷதினங்கள். | 318 |
| 9. | மாத்வமித்திரன் ஷீட்காலண்டர். | 318 |
| 10. | சங்கரலீலா விலாஸம். (ஸ்ரீமான் H. சுப்புராவ்) | 319 |

ஆசிரியர்:— ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார். கும்பகோணம்

# கக்குவான் இருமல்.

இதை 12 நாளிலேயே குணப்படுத்துவதான டாக்டர் பேரியாராவின் ஹூபிங் காப் ஸ்பெஸிபிக் இருக்கையில் 3மாதகாலம் உங்கள் குழந்தை வருந்தும்படி விடாதீர்கள், ஓர் பாட்டில் ரூ. 2—12—0

ஆஸ்த்மா க்யோர் இதரமருந்துகள் உபயோகமில்லாமற் போகுமாகில் காசத்திற்கு இதுதான் கைகண்ட மருந்து ஓர் பாட்டில் ரூ. 4—8—0

ஆண்டிடயாபிடின் இது நீரழிவை நிச்சயமாய் 6மாதத்திற்குள் சொஸ்தப்படுத்தும். ஓர் டின் ரூ. 4—12—0

ஆர்டருடன் ரூ. 2-ஐ மணியார்டராகவோ ஸ்டாம்பாகவோ அனுப்பவும்

PEREIRA & Co., Chemists No. 13, Calicut. (S. India)

## மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாஸமாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழி பெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன. ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள். இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும். எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும். பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்த ஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும். பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும் ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப வேண்டும்

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

---

## மாத்வமித்திரன் பழைய வாலியங்கள்

## வெகு சொற்பம் தானிருக்கின்றன.

## உடனே அவைகளைப்பெற

## முந்துங்கள்.

ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹாயநம:

# மாத்வமித்திரன்

श्रीमन्मध्वमत हरिः परतरः, सत्य जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

---

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

## ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம்

---

### இருபத்தி இரண்டாவது அத்தியாயம்

(ஸ்ரீம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழி பெயர்ப்பு.)

(காபிரைட், முன் 263-பக்கம் தொடர்ச்சி)

---

எப்படி என்றால் நினைக்கமாளாததும் சாசுவதமானதும் குறைவற்றதும் பூர்ணமானதுமான ஸத்குணங்களுக்கு ஸமுத்ரமென்னும் முக்கியசரீரமுள்ளவனே! ஸமஸ்ததோஷங்களுக்கும் தூரமாய் அவை விலகியிருப்பவனே; லக்ஷ்மி ப்ரம்மா வாயு சிவன் இந்திரன் முதலான தேவர்களால் எக்காலத்திலும் வணங்கப் படுவனே; எல்லாஜகத்துக்கும் காரியங்களை நடத்துகிறவனே; எல்லோருக்கும் ப்ராணத்தை தரிப்பவனே! ப்ரபுவே! முக்தர்களுக்கு ஆசிரயமாயிருப்பவனே! ஹே ஸர்வோத்தமா! என்று துரௌபதி ஸ்தோத்திரம் செய்து தன் கூந்தலைப்பிடித்து இழுத்த தான் அனுபவித்த துக்கத்தை ஸர்வேசுவரனை ஸ்ரீகிருஷ்ணரிடம் சொல்லிக்கொண்டாள். துரௌபதி கருட சேஷருத்ராதிகளை விட ஸ்ரீகிருஷ்ணரின் அதிகமான அனுக்ரஹத்திற்கு பாத்திரமானவள். அதனால்தான் ஸ்ரீகிருஷ்ணர் துரௌபதியின் எல்லா வாக்யத்தையும் கேட்டு ப்ரதிக்ஞையைச் செய்தார். பீமசேனால் கொல்லப்பட்டுப் போன பார்த்தாக்களை அனைத்துக்

208726.
600 008



கொண்டு கூந்தலை அவிழ்த்துக்கொண்டு இருக்கும் துரியோதனாதிகளின் எல்லா ஸ்திரீ ஜனங்களையும் உனக்கு காட்டுகிறேன். இதற்கு மாறாக ஆகப்போவதில்லை, என்று இவ்வாறு மதுரமான வாக்யங்களால் துரௌபதியை ஸ்ரீகிருஷ்ணர் ஸமாதானம் செய்து அடியிற் கண்டபடி சொன்னார். நான் உங்கள் சமீபத்தில் இருந்திருந்தால் உங்களுக்கு இவ்வாறு ராஜ்யம் போன கஷ்டம் நேர்ந்திராது. துராத்மாவான ஸால்வராஜனிடம் நான் யுத்தத்திற்கு போனேன். மகாபாபியான அவன் என்னால் கொல்லப்பட்டு போனான், என்றார். மிகவும் ஸமீபத்திலுள்ள வஸ்துவிலும் தூரத்திலுள்ள வஸ்துவிலும், பிந்தியும் முந்தியுமுள்ள வஸ்துவிலும், சுபாவமாய் விலகியுள்ள பரமாணு முதலியவைகளிலும், மறைவாயுள்ள வஸ்துக்களிலும், விஷ்ணுவுக்கு எல்லா தேசங்களிலும் காலங்களிலும் வியாப்தி என்பது இருப்பதால் ஞானாதி விஷயத்தில் அவருக்கு ஸாமார்த்தியமில்லை என்பது இல்லை. எல்லா காலத்திலேயும் எல்லா விஷயத்தின் ஞானம் சக்தி இருந்தாலும் ப்ரபுவான விஷ்ணு மனுஷ்யர்களின் ரீதியை அனுஸரித்து அவர்களைப்போல் நடிக்கிறார். துஷ்டர்களான துரியோதனாதிகளுக்கு தோஷவிருத்தி ஏற்படுவதற்காகவும் பீமசேனாதிகளுக்கு க்ஷமை முதலான குணவிருத்தி ஏற்படுவதற்காகவும், ராஜஸூயயாகம் அனேகதானங்கள் முதலான காரியங்களால் யுதிஷ்டிரருக்கு அவருடைய யோக்யதையை மீறி அதிகமாய் விருத்தியடைந்திருந்த தர்மத்தை துரௌபதியிடமும் பீமசேனர் முதலான அவருடைய தம்பிகளிடமும் அவரவர்களின் யோக்யதைக்கு தகுந்தபடி சேரவைக்கவும், ஸ்ரீகிருஷ்ணர் அவருடைய இஷ்டத்தின்பேரில் தான் தர்மபுத்திரரை த்யூதத்தில் தோற்றுப்போகும்படி செய்தார். அவரவர்களின் யோக்யத்தைக்குமீறிசெய்யும் தர்மத்தை நாசம் செய்வதால் விஷ்ணுக்கு ஏதமானத்விடேயஸ்யராஜா என்ற ரிக்வேதமந்திரத்தில் ஏதமானத்விட் என்று பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த மந்திரம் ரிக்வேதம் ப்ரதம அத்தியாயத்தில் உதாஹரிக்கப்பட்டிருக்கிறது. பீஷ்மர் துரோணர் திருதராஷ்டிரன் முதலானவர்களுக்கு அவர்களின் யோக்யதையை மீறி தர்மம் ஞானம் இவைகளால்



ஏற்பட்ட பலனை பாண்டவர்களிடமே நிலைநிறுத்துவதற்காகவும் ஸ்ரீகிருஷ்ணர் இவ்வாறு பாண்டவர்கள் அவமானப்படும்படி செய்தார். விஷ்ணுவான ஸ்ரீவேதவியாசர் துரியோதனாதிகளுக்கு மீண்டும் பாபத்தை விருத்தி செய்வதற்காக தனக்கு பாண்டவர்கள் அதிகமாய் பிரியர்களென்றும் அவர்களை வனத்திற்கு அனுப்பியது தனக்குக் கொஞ்சமேனும் பிரியமல்லவென்றும் திருதராஷ்டிரனிடம் சொன்னார். ஸ்ரீவேதவியாஸர் தனக்கு பாண்டவர்கள் பிரியர்கள் என்று சொன்னதாலேயே பாண்டவர்களுக்கு புண்ய விருத்தியும் துரியோதனாதிகளுக்கு பாப விருத்தியும் ஆகிற்று. இது ஏற்படவேண்டுமென்று தான் ஸ்ரீவியாஸர் இவ்வாறு சொன்னார். சொக்கட்டான் ஆட்டம் நடக்கும் பொழுது அர்ஜுனாதிகள் தங்களுக்கு குருவான பீமசேனருக்கு துரியோதனாதிகள் செய்த அவமானத்தை க்ஷமித்தது முழுதர்மமாகாது. பீமசேனரிடம் இப்பேர்ப்பட்ட பொறுமை இல்லாதிருந்தால் தான் அவருக்கு வஞ்சனையில்லாத தர்மம் ஏற்பட்டது. துரௌபதி மிக்க கஷ்டத்தை அனுபவித்ததால் மேலான தர்மம் ஏற்பட்டது. சத்ருக்களுக்கு சாபம் கொடுக்கலாகாதென்பது பீமசேனரின் அபிப்பிராயமென்று துரௌபதி நன்கு அறிந்தவள். ஆகையால் துரௌபதிக்கு பொறுமை தர்மமாயிற்று. ஆகவே இந்தகாரணங்களைக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணர் பாண்டவர்களிடம் அவரவர்களின் யோக்யதைப்படி தர்மவிருத்தியை உண்டாக்கினார். இதற்கு காரணமாக தான் ஊரிலில்லாதிருந்ததை ஸ்ரீகிருஷ்ணர் எடுத்துச்சொன்னார்.

## ஸால்வனின் யுத்த விருத்தாந்தம்.

பாண்டவர்களே! நான் உங்கள் சபையில் நாரதரால் ஸால்வராஜன் யுத்தத்திற்கு வருவதாய்க்கேட்டு, நான் ருக்மணி புத்ரனை ப்ரத்யும்னாதிகளை முன்னாடி அனுப்ப, அவர்கள் துவாரகைக்குச் சென்றனர். அப்பொழுது ஸால்வராஜன் ஸௌபவிமானத்தைக் கொண்டு துவாரகையை அதிகமாய் ஹிம்சித்தான். பிறகு ப்ரத்யும்னன் ஸமஸ்தமான சைனியங்களுடனும், இதர யாதவ ஸமூகத்துடனும் தன் ஸஹோதரர்களுடனும் கூடி சீக்கிரமே

நகரத்தை விட்டு வெளிவந்தான். பாபியான ஸால்வன் ப்ரத்யும்னனை என் பிள்ளை என்று தெரிந்து, ஸௌப விமானத்திலிருந்து இறங்கி யுத்தம் செய்வதற்காக வென்று ரதத்தில் ஏறினான். என் பிள்ளையான ப்ரத்யும்னன் ஸால்வராஜனுடன் தர்மயுத்தம் செய்து அவன்போட்ட அஸ்திரங்களை தன் மகத்தான அஸ்திரங்களால் தடுத்து, அவனைக்கொன்று விடுவதற்காக நான் கொடுத்திருந்த அமோகமான ஓர் பாணத்தை கையில் எடுத்தான். இவ்வாறு நிச்சய புத்தியுடன் ப்ரத்யும்னன் பாணத்தை எடுத்தபின் ஆகாயவாணியைக் கேட்டான். ஹேப்ரத்யும்னா! பகவான் நாரயணன் தான் கிருஷ்ணவதாரஞ் செய்து ஸால்வராஜனைக் கொல்கிறேன் என்று முன்னாடியே ஸங்கல்பம் செய்திருக்கிறார். அந்த காரணத்தால் தான் விஷ்ணுவின் அவதாரமான பரசுராமர் தன் ஸங்கல்பத்தின்படி ஸால்வராஜனை துறத்திவிட்டாரே யல்லாது கொல்லவில்லை. ஆகையால் ஹேப்ரத்யும்னா! இந்த ஸால்வனை நீ கொல்லலாகாது. உன் கையிலுள்ள பாணம் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிக்க ப்ரியமானது. வீணாய்போகாதது, ஆகவே இந்த பாணத்தை ப்ரயோகம் செய்யாதே. நான் ஸால்வராஜனின் புத்தியில் இருந்து அவனை யுத்தத்தினின்றும் திருப்புகிறேன். என் றிவ்வாறு வாயுபகவான் சொன்னார். ப்ரத்யும்னன் அந்த வாயு பகவானின் ஆகாசவாணியைக் கேட்டு வீணாய்போகாததாயுள்ள அந்த பாணத்தை உபஸம்ஹாரம் செய்தான். ஸால்வன் தன் ஸௌபவிமானத்தில் திரும்ப ஏறி "பையன்களுடன் கலகம் செய்வதால் என்ன ப்ரயோஜனம், கிருஷ்ணருடன் யுத்தம் நடக்கட்டு" மென்று சொல்லிக்கொண்டு தன் ஊருக்கு புறப்பட்டுப் போனான். அப்பொழுது ப்ரத்யும்னன் ஸாம்பன் கதன் சாருதேஷ்ணன் இவர்கள் மந்திரி ஸமூகங்களுடன் கூடிய ஸால்வராஜனின் ஸைனியத்தை ஸம்ஹாரம் செய்து ஸந்தோஷமுள்ளவர்களாய் தங்கள் துவாரகாபுரியை ப்ரவேசித்தனர். நான் அப்பொழுதுதான் துவாரகைக்கு வந்து சேர்ந்தேன். அக்ஷணமே அவர்களால் இந்த எல்லா விருத்தாந்தத்தையும் கேட்டேன். எந்த பாணம் கையிலிருந்தால் என் ஸாமார்தியத்தால் நிச்சயமாய் ஜயம் ஏற்படுமோ, அப்பேர்பட்ட பாணத்தை தரித்



திருந்ததால் என்மகனான ப்ரத்யும்னனால் சத்ருவான ஸால்வராஜன் தோற்றுப்போனான் என்பதைக்கேட்டு, துவாரகை ஸால்வராஜனால் நாசமாயிருந்ததையும் பார்த்து, நான் அவனை பின்பற்றி துறத்திக்கொண்டு போனேன். அவன் அப்பொழுது ஸமுத்திரத்தின் மீது ஸௌபவிமானத்தில் உட்கார்ந்து கொண்டு போவதைப்பார்த்து நான் அவனுடன் யுத்தம் செய்யவே, அவன் என்னிடம் சஸ்திரங்களையும் அஸ்திரங்களையும் விருஷ்டிசெய்ய நான் அதைத்தடுத்து அவனை பாணசமூகங்களால் அடித்தேன். அதிபாபியான ஸால்வன் என்னிடம் மாயாவித்தைகளை ப்ரயோகம் செய்தான். நான் அந்த மாயைகளை யுத்தத்தில் ஒரு க்ஷணகாலம் விளையாட்டாய் பார்த்திருந்து, ஞானாஸ்திரத்தால் அவைகளை நாசம்செய்து அநேக தைத்தியர்களை ஸம்ஹரித்து பர்வதங்களை விருஷ்டி செய்யும் அந்த ஸால்வனை ஸமுத்திரத்தில் தள்ளினேன். ஸௌபவிமானத்தை சக்ராயுதத்தால் அதன் கட்டுகளை பேதித்து ஸமுத்திரத்தில் தள்ளினேன். பிறகு ரதத்திலேறிக் கொண்டு வந்த ஸால்வராஜனை பாணங்களால் கைகள் இல்லாதவனாய்ச் செய்து, கௌமோதகி என்னும் என்னுடைய கதாயுதத்தால் அவனுடைய உத்தமமான ரதத்தை பேதித்து, சக்ராயுதத்தால் அவனுடைய சிரஸ்ஸை கத்தரித்து, ப்ரம்மருத்திராதிகளால் ஸ்தோத்திரம் செய்யப்பட்டவனாய் நான் துவாரகாபுரம் திரும்பி வந்து சேர்ந்தேன். இவ்வாறு ஸால்வவதம் செய்வதற்காக நான் தேசாந்திரம் போனதால், உங்களுக்கு இந்த வனவாச ஸம்பந்தமான துக்கம் ஏற்பட்டது, என்று இவ்வாறு சொல்லி பாண்டவர்களையும் த்ரௌபதியையும் ஸமாதானம் செய்வதற்காக இந்த வனத்தில் ஸ்ரீகிருஷ்ணர் சில நாள் வாசம் செய்தார். ஸத்யபாமையும் த்ரௌபதியை ஸமாதானம் செய்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணரை பின்பற்றி அவ்விடம் வாசம் செய்தாள்.

பாண்டவர்களின் இதர பத்தினிமார்களும் அவர்களின் பிள்ளைகளும் கூட பாண்டவர்களின் பின்னாடி வனத்திற்கு வந்து அங்கேதான் வஸித்திருந்தனர். பிறகு திருஷ்டத்யும்னன் த்ரௌபதியை ஸமாதானம் செய்து ஸ்ரீகிருஷ்ணரை நமஸ்கரித்து விட்டு பாண்டவர்களிடமிருந்து அனுமதி பெற்று தன் தங்கை பின்

களான உபபாண்டவர்களை அழைத்துக்கொண்டு தன் பாஞ்சால புரம் சென்றான். திருஷ்ட கேதுராஜன் தன் தங்கையான யுதிஷ்டிரனின் பாரியாளான தேவகிதேவியையும், காசிராஜன் தன் பெண்ணை பீமசேனரின் பாரியாளான காளிதேவியையும் அழைத்துக்கொண்டு அவர்கள் ஊருக்குபோய் சேர்ந்தனர். மற்ற பாண்டவர்களின் பத்தினிமார்கள் குந்திதேவியுடன் விதுரனின் வீட்டில் இருந்தனர். அதன் விபரமாவது, நகுலனுடைய பாரியை பார்வதி என்பவள். அவள் பூர்வம் திலோத்தமை என்ற அப்ஸரஸ்ஸு தான் இந்த பார்வதியாகப் பிறந்தாள். இவளும் முன்னடி பிரஸ்தாபிக்கப்பட்டிருந்த ஜராஸந்தனின் பெண்ணை நகுலனுடைய பாரியை உஷையும், ஸகதேவனின் பாரியை சல்ய ராஜனின் பெண்ணை விஜயை என்பவளும் ஆகிய இம்மூவர்களும் மாமியாரான குந்திதேவியால் பாண்டவர்களுடன் வனத்திற்கு போகாதிருக்கத் தடுக்கப்பட்டவர்களாய், குந்தியோடே இருந்தனர். ஸ்ரீகிருஷ்ணர் ஸுபத்திரையையும் அபிமன்யுவையும் ரதத்தில் உட்கார்த்திவைத்துக்கொண்டு பாண்டவர்களின் அனுமதியைப் பெற்று ஸத்யபாமையுடன் சேர்ந்து துவாரகாபுரத்திற்கு பிரயாணம் செய்தார். துரௌபதியின் பிள்ளைகள் சிறிது காலம் துருபதராஜனின் நகரத்தில் வசித்திருந்து, பிறகு துவாரகைக்குப் போய் அங்கு ஸ்ரீகிருஷ்ணரால் ஸம்ரக்ஷிக்கப்பட்டவர்களாய் வாஸம் செய்தனர்.

## ஹடவாதம்.

பிறகு தர்மபுத்திரர் தான் சொக்கட்டாடிய குற்றத்தால் சங்கடப்பட்டவராய் துரௌபதியை தன் தம்பியின் பாரியாளாகவே அந்த ஸ்தானத்தில் எப்போதும் வைத்திருந்தார். அதாவது அவளுடன் ஸம்போகம் செய்வதை விட்டுவிட்டார் என்று பொருள். அந்த பாண்டவர்கள் ரிஷிகள் போஜனம் செய்து மீர்ந்த அன்னத்தை போஜனம் செய்துகொண்டு, வனத்தில் வாசம் செய்தனர். தம்பிகள் போஜனம் செய்தபின் தர்மபுத்திரர் போஜனம் செய்வார். தர்மபுத்திரர் ஆக்ஞை மீறமுடியாததாகையால் தம்பிமார்கள் அவருக்கு முன்பு போஜனம் செய்திருந்தனர்.



தர்மபுத்திரருக்கு பிறகு துரௌபதி ஒருவளே போஜனம் செய்திருந்தாள். இவ்வாறு விஷ்ணுவை ஆசிரயித்தவர்களாய் விஷ்ணுக்கு ஸமர்ப்பணம் செய்த போஜனத்தை மட்டில் போஜனம் செய்யும் பாண்டவர்களுக்கு வனத்தில் ஓர் வருஷம் கழிந்தது. பிறகு நல்ல நீதிகளை அறிந்தவளான துரௌபதி பீமசேனரின் ஆக்ஞையின் பேரில் யுதிஷ்டரரைப்பார்த்துச் சொன்னாள். தர்மபுத்திரர் மிக்க சல்லிசான மிருது ஸ்வபாவமுள்ளவராதலால் பதினன்கு வருஷத்திற்கு பிறகும் கூட பீஷ்மாசாரியார் முதலான குருஜனங்களின் பயத்தால் ராஜ்யத்தை விரும்பமாட்டார், என்று அபிப்பிராயப்பட்டு ப்ரபுவான பீமசேனர் துரௌபதியை தர்மபுத்திரரிடம் ராஜ்யம் பெறுவதற்கு உதவகூடியதான பிரஸ்தாவனையைச் செய்ய அனுப்பித்தார். எல்லா ஜனங்களின் விஷயத்திலேயும் சாமர்த்தியம் கொண்டிருக்கும் அரசர்கள் க்ஷமை காட்டுவது தர்மமல்ல. துர்ஜனங்களிடம் க்ஷமை செய்வதால் அது பாபத்திற்கு காரணம். என்று சாஸ்திரத்தால் ஸ்தாபித்து துரியோதனாதிகள் பதினன்காவது வருஷத்தில் ராஜ்யத்தைக் கொடுக்காமலிருந்தால், அவர்களைக் கொன்று ராஜ்யத்தை ஏற்படுத்திக்கொள்ள நான் முந்திக்கொள்கிறேன் என்று தமையனாரான தர்மபுத்திரரால் ஸத்ய ப்ரதிக்ஞையைச் செய்விப்பதற்காக பீமசேனர் வாக்கு வாதத்தை ஆரம்பிக்கும் அபிப்பிராயத்துடன், துரௌபதியை முதலில் தர்மபுத்திரரிடம் அனுப்பித்தார். துரௌபதி தர்மபுத்திரரைப் பார்த்துப் பேசினாள். இந்த விவாதத்திற்கு ஹடவாதம் என்று பெயர். ஹே தர்மபுத்திரா! துஷ்டஜனங்களின் சமுகத்தினிடம் க்ஷமை செய்வது ஸாமர்த்தியமுள்ள அரசனுக்கு தர்மமாகாது. நீங்கள் எல்லா சமயத்திலேயும் ஸுஜனங்கள் துர்ஜனங்கள் எல்லோரிடமும் அந்த க்ஷமையை வீணாய்க் கொண்டிருக்கிறீர். என்று இவ்வாறு துரௌபதியால் சொல்லப்பட்ட யுதிஷ்டிரர் இவ்வாறு பேசினார். எல்லோரிடமும் பொறுமைகாட்டுவது தான் தர்மமாகும். க்ஷமையால் தான் உலகமெல்லாம் சம்ரக்ஷிக்கப்படுகிறது. எல்லா உலகத்தின் ஸுகதுக்கங்களுக்கு நாராயணன் தான் கர்த்தா. நாராயணனால்தான் எல்லா உலகத்துக்கும் அதன்

யோக்யதானுஸாரமாய் ஸுகதுக்காதிகள் கொடுக்கப்படுகின்றன. நாராயணனுக்கு கர்த்ருத்வமிருப்பதால் எந்த புருஷனும் எந்த காரணத்தாலும் கோபத்திற்கு ஆளாவதில்லை. ஆகையால் எல்லா பிராணிகளிடமும் க்ஷமை செய்வதே இந்த புருஷனுக்கு முக்ய தர்மமாகும் என்றிவ்வாறு சொன்ன தர்மபுத்திரரைப் பார்த்து திரௌபதி இவ்வாறு பேசினாள். ஸாதுக்களிடமும் அஸாதுக்களிடமும் க்ஷமை செய்வது தர்மமாய் இருக்கும்பக்ஷத்தில் துஷ்டசிக்ஷணமில்லாமல் போவதால், அதனால் பிரயோஜனமில்லாமல் போகிறது. ஜனங்களின் பயிர்செயல் முதலான வியவஹாரங்கள் இல்லாமல் போகும். திருடர்கள் முதலான கெட்டஜனங்களிடமிருந்து உலகம் நாசம் ஆகும். விஷ்ணு எல்லாவற்றையும் ப்ரவர்த்தகர்தான். மகாலட்சுமி பிரம்மாருத்திரன் முதலான எல்லா சேதனர்கள், கந்தையும் கட்டையும் போல், விஷ்ணுக்கு அதீனர்கள் என்பது உண்மையே, ஆயினும் புருஷன் செய்யும் எத்தினம் பிரயோஜனமில்லாததல்ல, ஈசுவரின் ஆக்ஞையின் பேரில் சேஷ்டைகளைச் செய்யும் ஜீவன்தான் கர்மாவை அநுஸரித்து புண்யபாப பலனை அனுபவிக்கிறான். ஜீவனுக்கு பலனை அநுபவிப்பதென்பது இருப்பதால் ஜீவன் செய்யும் கர்மம் நிஷ்பலமாவதில்லை. ஆகையால் ஜீவன் ஈசுவரனின் அதீனனான அஸ்வதந்திர கர்த்தாவாகிறான். புருஷனுடைய ப்ரயத்தனம் நிஷ்பலமென்றும் ஜீவனுக்கு கர்த்ருத்வம் இல்லை என்றும் சொல்லும் பக்ஷத்தில், எல்லா வேதங்களிலும் இருந்து வரும் அஹரஹ: ஸந்தியாமுபாஸீத, நஸுராம் பிபேத் அதாவது பிரதிதினமும் ஸந்தியாவந்தனத்தைச் செய்யவேண்டும், கள்ளைக் குடிக்கலாகாது, என்ற விதி நிஷேதங்கள், யாரை உத்தேசித்து பிரவிருத்தித்ததாகும்? ஜீவன் விதி நிஷேதங்களுக்கு விஷயனாகாமலிருந்தால் அவைகள் விஷ்ணுக்காக என்று தான் ஏற்படவேண்டும். விஷ்ணுக்கு விதிநிஷேதங்களுக்கு விஷயமாயிருக்கும் தன்மை ஏற்பட்டால், அதனால் ஏற்படும் புண்ய பாபங்களின் சம்பந்தம் அவருக்கு வரவேண்டியதாய் ஏற்படும். அதனால் ஸுகதுக்கங்களை அனுபவிக்கும் தன்மை விஷ்ணுக்கு ஏற்படும். விஷ்ணு உத்தமனான ஸ்வதந்திர கர்த்தாவாதலால் புண்ய பாபங்களால் அவர் சம்பந்தப் படுவதில்லை. ஈசுவரனுக்கு புண்ய பாப சம்பந்தம் இல்லாமல் போயிருப்பதால் விதி நிஷேத சாஸ்திரங்களுக்கு பிரயோஜனத்தன்மை ஏற்படவேண்டி ஜீவன்தான் ஈசுவரனுக்கு அதீனனான கர்த்தாவாகிறான், என்றிவ்வாறு திரௌபதி சொன்னாள்.

(தொடரும்)



# ஆசாரமாலை.

(முன் 208-ம் பக்கம் தொடர்ச்சி)

ஜபகாலத்திலும் விரதம் ஹோமம் இந்த காலத்திலும் பேசலாகாது. ஆனால் உத்தம ப்ராமணர்கள் வந்தால் அவர்களை எழுந்து நமஸ்கரித்துவிட்டு யோகக்ஷேமம் விசாரித்துவிட்டு ஜபம் செய்யவேண்டும். சூத்திரன் வந்தால் அவனுடன் எவ்வகை சந்தர்பத்திலும் பேசலாகாது. ஜபகால்த்தில் துளசிகாஷ்டமாலை, நெல்லி முள்ளிமாலை, ஆயிர மணிகளைக்கொண்ட பத்மாக்ஷமாலை முதலிய ஐந்து மாலைகளை ஜபகாலத்தில் தரித்தால் அதனால் ஏற்படும் புண்யபலனை நாரதா என்னால் சொல்லிமாளாது என்று ஸ்ரீவியாஸர் ஸ்காந்த புராணத்தில் அறிவித்திருக்கிறார்.

ஜபமாலை:— விரல் விட்டு ஜபித்தால் ஒரு மடங்கு பலனும், கைரேகையின் கணக்காக வைத்துக்கொண்டு ஜபித்தால் பத்துமடங்காய் அதிக பலனும், சங்கு மணிகளின் கணக்கின்படி ஜபித்தால் நூறு மடங்கு அதிக பலனும், பவழமணிகளைக்கொண்டு ஜபித்தால் ஆயிரம் மடங்கு அதிகபலனும், ஸ்படிக மணிகளைக்கொண்டு ஜபித்தால் பதினாயிரம் மடங்கு அதிகபலனும், முத்துமாலையைக் கொண்டு ஜபித்தால் ஒரு லக்ஷம் மடங்கு அதிகபலனும், கமலாக்ஷமாலையைக் கொண்டு ஜபித்தால் பத்து லக்ஷம் மடங்கு பலனும், தங்கமணிகளைக்கொண்டு ஜபித்தால் கோடிமடங்கு அதிகபலனும், தர்பமுடிச்சுகளைக் கொண்டும் ருத்திராக்ஷ மணிகளைக் கொண்டும் ஜபித்தால் அனந்தமான பலன்களும் உண்டாகுமென்று கௌதமர் அறிவிக்கிறார். கமலமணியைப்போல் பரிமாணமுள்ள மணிகளை வைத்துக்கொண்டு ஜபிப்பது உத்தமமாகும். நெல்லிக்காய் பரிமாணமுள்ள மணிகளைக்கொண்டு ஜபிப்பது மத்தியமம், ஏலக்கைவிதை பரிமாணமுள்ள மணிகளைக் கொண்டு ஜபிப்பது அதமம். வெள்ளி தங்கம் ரத்னம் இவைகளைக் கொண்ட மாலையால் ஜபிப்பது ஸ்வர்கம் மோக்ஷம் இத்யாதிகளைக் கொடுக்கும், வெண்தாமரை மணிகளைக்கொண்டு ஜபிப்பது அமிர்தமான பலனைத்தரும். துளசிகாஷ்டமணிகளைக் கொண்ட மாலையால் ஜபித்தால் அதன் பலனைச் சொல்ல ஆயிரம் நாவுடைத்த ஆதிசேஷனாலும் முடியாது, என்று ஓர்நூல் அறிவிக்கிறது. நூற்றெட்டு மணிகளைக்கொண்ட மாலை தான் ஜபத்திற்கு ஸர்வோத்தமமானது. ஐம்பத்தி நான்கு மணிகளைக் கொண்ட மாலை ஜபத்திற்கு மத்யமமாகும். இருபத்தி ஏழு மணிகளைக்

கொண்ட மாலை அதமமாகும். முப்பது கமலாக்ஷமணிகளைக் கொண்ட மாலையால் ஜபித்தால் ஸம்பத்து உண்டாகும். இருபத்தி எட்டு மணிகளைக் கொண்ட மாலையால் ஜபித்தால் புஷ்டி ஏற்படும். இருபத்தி ஐந்து மணிகளைக் கொண்ட மாலையால் ஜபித்தால் மோக்ஷமுண்டாகும். பதினைந்து மணிகளைக்கொண்ட மாலையால் ஜபித்தால் அபிசாரம் செய்யும் பொழுது அந்த பலனைத்தரும். ஒன்பது மணிகளைக்கொண்டு ஜபித்தால் காம்ய பலன் சித்திக்கும். பஞ்சகவ்யத்தால் பிரம்மசூத்ரங்களைச்சொல்லி மணிகளை அலம்பி, பட்டுக்கயிர், சுத்தமான பருத்திநூல், வெள்ளிக்கம்பி, தங்கக்கம்பி இவைகளில் கோர்க்கவேண்டும். பின்புறம் பின் புறத்துக்கும், முகபாகம் முகபாகத்திற்கும் பொருந்தும் படியாயும், ஓர்மணிக்கும் மற்றொரு மணிக்கும் இடையில் அவகாசம் இருக்கும்படியாயும் கோர்க்கவேண்டும். மாலையின் நடுவில் நண்டைப்போல் கொண்டையைச் செய்து அதன் முடிச்சில் மணியைவைத்து அதன்மீது, மேருவென்னும் மற்றொரு கொண்டையை வைத்து, அதன் மீது மணியை வைத்து மாலையின் நடுவில் கோர்க்கவேண்டும். ஜபமாலையை மந்திர ஹோமாதிகளால் ப்ரதிஷ்டையைச் செய்தபின் தான் அதை ஜபத்திற்கு உபயோகிக்கவேண்டும். ஸாலக்ராமத்தின் மீது ஸமர்ப்பிக்கப்பட்டதாயும், நாராயணாஷ்டாக்ஷரி முதலான மந்திரங்களால் ஜபிக்கப்பட்டதாயுமுள்ள ஜபமாலையை குருவின் கையினின்றும் வாங்கிக்கொண்டு குங்குமம் தடவி அதை நமஸ்கரித்துவிட்டு அதைக் கொண்டு ஜபிப்பது தான் அவசியமாகும். பாம்புவிரல் மோதிரவிரல் கட்டைவிரல் இவைகள் ஸம்மந்தப்பட்டுத்தான் ஜபிக்கவேண்டும். ஆள்காட்டி விரலால் ஜபமாலையைத் தொடலாகாது. எந்த ஸந்தர்ப்பத்திலும் சுண்டுவிரல் ஸம்பந்தம் படுவதே தகாது. கட்டைவிரல் சம்பந்தப்பட்டு ஜபித்தால் மோக்ஷமும், பாம்புவிரல் சப்பந்தப்பட்டு ஜபித்தால் ஆரோக்யமும், மோதிரவிரல் சம்பந்தப்பட்டால் ஸமஸ்த அபீஷ்ட சித்தியுமுண்டாகும். அபிசாரம் செய்யும் பொழுது சுண்டுவிரல் சம்பந்தப்படவேண்டும். அதில் மகாபலனைத்தரும். ஜபம் செய்யும்பொழுது ஜபமாலையை வெளியேக்காட்டவே கூடாது. இதரள் பார்வைக்கு அது தென்பட்டு விட்டால் அந்த ஜபம் நிஷ்பலமாய் போய்விடும். தன் சொந்த குருவாயிருந்தாலும் ஜபகாலத்தில் ஜபமாலையை அவருக்கு காண்பிக்கலாகாது. இடைவெளியில்லாமல் மணிகள் கோர்த்த கமலாக்ஷமாலை, கீழே பூமியில் விழுந்துவிட்ட கமலாக்ஷமாலை இவைகளைக்கொண்டு ஜபிக்கலாகாது. அப்படி ஜபித்தால் ஜபம் நிஷ்பலமே ஆகும். ஜபமாலை தரையில் விழுந்தாலும், கொண்டையைத் தாண்டி ஜபித்து விட்டாலும், மூன்று தடவை ப்ராணயாமம் செய்து கொள்ளவேண்டும். ப்ரதிஷ்டை செய்யாதமாலையைக் கொண்டு ஜபித்தால் ஜபம் பலனைத்தராது. ப்ரா



மணன் எச்சந்தர்பத்திலும் இடதுகையால் ஜபமாலையைத் தொடலாகாது. கையிலோ கழுத்திலோ விரலிலோ ஜபமாலையை எப்பொழுதும் தரிக்கலாகாது, என்று ப்ரம்மதர்க்க புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பாம்புவிரலால் ஜபமாலையை உருட்டுவது ஸர்வ சித்தியைத் தரும். இதர விரல்களைக் கொண்டு உருட்டலாகாது. நகங்கள் படலாகாது. கொண்டைக்கு ப்ரதக்ஷிணமாக ஜபமாலையை வதனபாகம் முதல் ஆரம்பித்து பிருஷ்டபாகம் முடிய திருப்பி, மீண்டும் வதனபாகத்திலிருந்து துவக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜபம் செய்யும் பொழுது ஜபமாலையை குருகூட பார்க்கலாகாது. தானும் பார்க்கலாகாது. கையால் மட்டில் தொட்டுத் தெரிந்துகொள்ளலாம். அப்படிக்கில்லாவிடில் ஜபம் நிஷ்பலமே. ப்ரணவம் புருஷனென்றும் மந்திரத்தின் தேவதை ஸ்திரீ என்றும், இந்தப்ப்ரணவமும் மந்திரமும் சேர்ந்து சொல்வதால் புருஷஸ்திரீ ஸம்யோகத்தைப்பார்க்கலாகாததால், ஜபத்தையும் பார்க்கலாகாதென்றும் அதை இரகசியமாய் வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் மனு காரணத்தை அறிவிக்கிறார். ஜபமாலை இல்லாதிருந்தால் கையிலுள்ள விரல் கணுக்களைக்கொண்டு ஜபிக்கலாம். பாம்பு விரல் மோதிரவிரல்களின் நடுக்கணுக்கள் மேருவென்று சொல்லப்படும். அவைகளுக்கு ப்ரதக்ஷிணமாக ஜபிக்கவேண்டும். எப்படி என்றால் மோதிரவிரலின் அடிக்கணுக்கைத் துவக்கி கிரமமாய் ஒவ்வொருகணுக்களை எண்ணிக்கொண்டு, சுண்டுவிரலின் அடிக்கணு, நடுக்கணு, மேல்கணு மோதிரவிரலின் மேல்கணு, பாம்புவிரலின் மேல்கணு, ஆள்காட்டி விரலின் மேல்கணு, நடுக்கணு அடிக்கணு, பாம்புவிரலின் அடிக்கணுவரையில் தொட்டு ஜபிக்க வேண்டும். அப்பொழுது பத்து ஜபமாகும்.

ஜபத்தின் விதம்:– முதலில் காயத்ரீஜபத்தைச் செய்த பிறகுதான் அஷ்டாக்ஷரி முதலான மந்திரங்களை ஜபிக்கவேண்டும். காயத்ரீயை ஜபிக்க முக்யகாலமிருக்கும்பொழுது, அதைவிட்டு வேறு மந்திரத்தை ஜபித்தால், அந்த மந்திர தேவதைகள் பிராம்மண்யத்தை விட்ட இந்த புருஷனைக்கொன்று விடும். காயத்ரீயை விட்டு வேறு மந்திரத்தை ஜபிப்பவன் வறட்டுதவளையைப் போல் கத்துகிறவன் என்று வேத வித்துக்கள் சொல்வதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜபமாலையை வைத்துக்கொண்டு காயத்ரீயை ஜபிக்கும் பக்ஷத்தில் அது பத்து தடவையாயிருந்தாலும் ஆயிரம் தடவை ஜபித்ததாய் ஆகும். ஆனால் ஸந்தியாவந்தனத்தில் செய்யவேண்டியதாயுள்ள காயத்ரீயை ஜபமாலையைக் கொண்டு செய்யலாகாது. அதை விரல்களின் கணுக்களின் கணக்கின்படி செய்யவேண்டும். அஷ்ட மகாமந்திரத்தில் சேர்ந்த காயத்ரீயை ஜபமாலையை வைத்துக்கொண்டு செய்யவேண்டும் அவ்வாறு காயத்ரிக்கு பிறகு அதனுடன் நாராயணாஷ்டாக்ஷரியை ஜபித்தால் இருபத்திநான்குலக்ஷம் காயத்ரீஜபம் செய்ததாய் ஆகும். ஜபம் செய்ய உட்காரும் பொழுது ஆஸனத்தின் கீழே பரமபுருஷனையும் ஆதார சக்தியையும்

கூர்மனையும் மண்டுகனையும் காலாக்னி ருத்ரனையும் வஜ்ரனையும் அனந்தனையும் வராஹனையும் பூமியையும் தியானித்து இவைகளின் பீஜாக்ஷரங்களுடன் சேர்த்து நம: என்று வாயால் சொல்லி நமஸ்காரம்செய்ய வேண்டும். முன்னாடி கூறப்பட்டிருக்கிறபடி பூமியின்மீது தர்பங்களை பரப்பி அவைகளின் மீது கிருஷ்ணாஜினத்தையோ புலித்தோலையோ போட்டு, அதன்மீது ரத்னகம்பளத்தையோ, பருத்திவஸ்திரத்தையோ சதுரமாய் மடித்துப் போட்டுக்கொண்டு உட்காரவேண்டும். சௌகரியமில்லாமலிருந்தால் தரையின்மீது தர்பத்தையோ அல்லது தான் தரித்திருக்கும் வஸ்திரத்திலிருந்து எடுத்த நூலையோ கீழேபோட்டுக்கொண்டு உட்காரவேண்டும். கிழக்கு முகமாகவோ வடக்கு முகமாகவோ அக்னி, தீபம், சந்திரன், நதி, ப்ராம்மணன், சூரியன் இவைகளின் சமீபத்தில் இவர்களுக்கு அபிமுகமாக மந்திர பூர்வமாய் உட்காரவேண்டும்; அந்த மந்திரமாவது: ப்ருத்வீத்யஸ்ய மந்திரஸ்ய, மேருப்ருஷ்டரிஷி: கூர்மோ தேவதா, ஸுதலம் சந்த: ஆஸனே வினியோக:| ப்ருத்வி த்வயா த்ருதாலோகா: தேவி த்வம் விஷ்ணுனா த்ருதா, த்வம் சதாரயமாம் தேவி பவித்ரம் குரு சாஸனம்| மாம்ச பூதம் குருதரே நதோஸ்மி த்வாம் ஸுரேச்வரி,|. ஆஸனே ஸோம மண்டலே கூர்மஸ்கந்தே உபவிஷ்டோஸ்மி. இதன் அர்த்தமாவது:—ப்ருத்வீதி என்ற இந்த மந்திரத்திற்கு மேருவின் ப்ருஷ்டம் அதாவது அந்த இடத்திலுள்ள அந்த பெயர் கொண்ட நாராயணன் ரிஷியாகும். கூர்மன்தேவதை, சந்தஸ்ஸு ஸுதலம். ஆஸனத்தில் இந்த மந்திரம் ப்ரயோகம் செய்யப்படுகிறது. பூமியின் ரூபம் தரித்த மஹாலட்சுமியே, உன்னால் இந்த எல்லா உலகங்களும் தரிக்கப்பட்டிருக்கின்றன. உன்னையோ ஸ்ரீவிஷ்ணு கூர்மரூபத்தால் தரித்திருக்கிறார். தேவி, நீ தரித்திருக்கும் இந்த ஜடமான பூமியில் என்னை உத்தாரம் செய், என் இந்த ஆஸனத்தை பரிசுத்தமாகச் செய், என்னையும் பரிசுத்தனாய்ச் செய், ஸமஸ்த தேவதைகளுக்கும் ஈசுவரியான உன்னை நான் நமஸ்காரம் செய்கிறேன். சந்திர மண்டலம்போல் வர்த்துளமாயுள்ள கூர்மாஸனத்தின் மீது இவ்வகையாய் ஆஸனத்தை கல்பித்துக்கொண்டு வீற்றிருக்கிறேன் என்று. பிறகு நாஸிம்ஹ மூர்த்தியுடைய ஸுதர்சன ஸ்வரூபமான அஷ்டசக்கிரத்தையும் அஷ்டபாகுவையும் தியானம் செய்து அதனால் அஷ்டதிக்கிலுமுள்ள பூதங்களை விரட்டி உச்சாடனம் செய்து திக்பந்தனம் செய்து கொள்ளவேண்டும். பிறகு "அபஸர்பந்துயே பூதா: யேபூதா: புவிஸம்ஸ்திதா:| யேபூதா: விக்னகர்த்தார: தேநச்யந்து சிவாக்ஞயா என்று அஷ்டதிக்கிலுமுள்ள ப்ராணிகளும் பூமியிலுள்ள ப்ராணிகளும் ஜபத்திற்கு இடைஞ்சல்செய்யும் ப்ராணிகளும் எங்கிருந்தாலும் அவை பகவானுடைய ஆக்ஞையின் பேரில் விலகட்டுமென்று பகவானை ப்ரார்த்திக்கவேண்டும். பிறகு குருநமஸ்காரம் செய்ய வேண்டும். அதற்கு முந்தியோ பிந்தியோ காசுத்தி செய்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

(தொடரும்)

---



## ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

# ஸ்ரீமத்வ விஜயம்.

---

### ஐந்தாவது ஸர்க்கம்.

---

(முன் 275-ம் பக்கம் தொடர்ச்சி)

(19) என்றிவ்வாறு சொன்ன ஸ்ரீமத்வாசாரியார் சங்கர பாஷியத்திலுள்ள பலிஷ்டமான தோஷங்களை மனதில் பதியும்படி அடுத்தடுத்து எடுத்துச்சொல்லவும், அங்கு கூடியிருந்த தர்க்க சாஸ்திரத்தில் நிபுணர்களான பண்டிதர்கள் அவைகளைக் கேட்டு ஆச்சரியப்பட்டு பிரயத்தனப்பட்டு வெகு திருடமான அந்த தோஷங்களை பரிகாரம் செய்ய முடியவில்லை. (20) அப்படியானால் ஆசாரியாரே! தாங்கள் சங்கரபாஷியத்தை மட்டில் தான் கண்டனம் செய்கிறீர். தாங்கள் ஒப்புக்கொண்டிருக்கும் அதன் மூலமாகிய பிரம்மஸூத்திரத்திற்கு தங்களைப்போன்ற பண்டிதர்களால் எந்த வகையிலும் தூஷணம் செய்ய முடியாததாயுள்ள வேறொரு அர்த்தத்தை எடுத்துச் சொல்லுங்கள். நாம் சிரணவம் செய்கிறோம் என்று அந்த நல்ல பேச்சுக்காரர்களான பண்டிதர்கள் சொன்னார்கள். (21) அப்பொழுது ஆசாரியாள், கஷ்டப்பட்டு அர்த்தம் செய்யும்படி இல்லாததாய் ஸ்பஷ்டமான அர்த்தமும் சமீபமான அன்வயமும், பொருந்தியதாயும், பொருத்தமான ஸூத்ரார்த்தங்களைக் கொண்டதாயும், பிரமாணமாய் எடுத்துக்கொண்ட வேதவாக்யங்களைக் கலந்ததாயும், இனி அவரால் வெளியாகப்போகும் ஸூத்ர பாஷிய கிரந்தமாகிய நாட்யத்திற்கு பூர்வரங்கமாயுள்ளதுமாகிய ஓர் அரிய உபன்யாசத்தை உரக்க எல்லோரும் நன்கு கேட்கும்படி உரைக்கலானார். (22) பிரம்மஸூத்திரத்தின் உண்மையான பொருளை அறிய விரும்பியிருந்த மாச்சரியமில்லாதவர்களும், சங்கரபாஷியத்தைக் கண்டிப்பதால் அவரை ஜயிக்க விரும்பி மாச்சரியங்கொண்டு வந்தவர்களுமான, அந்த இருவகையார்களாயும் சாஸ்திரத்தில் நிபுணர்களாயும் மகா யுக்திசாலிகளாயுமுள்ள பண்டிதர்

உ0827உ6



களையும் இந்தஉபன்யாஸவழியாய் மிகவும் மௌனமாக்கி பராஜயப் படுத்தினர்.

## பாஷியத்தைச் செய்ய பிரேரணை.

(23) ஒரு ஸமயம் நிர்மலமான சித்தங்கொண்ட பெரியாரான மத்யகேஹபட்டர் ஆசாரியாரிடம்வந்து அவரைப்பார்த்து அவரிடம் மிகவும் மகிழ்ந்தார். மத்யகேஹர் ஆசாரியாரிடம் முன்பு அவர் தன் வார்த்தையைக் கேளாமல் ஸன்னியாஸம் பெற அடம் பிடித்தாரே என்று ஆசாரியாரிடம் மனஸ்தாபப்பட்டிருந்திருந்தாலும் அதை மறந்து அவரிடம் சந்தோஷமடைந்தார். குணங்கள் ஏராளமாயிருந்து குணக்கடலராயுள்ளவரிடம் ஸாது ஜனங்கள் சந்தோஷப்படுவார்கள்தான். (24) வித்வானன மத்யகேஹபட்டர் தன்மைந்தனை ஸ்ரீமத்வாசாரியாரின் சரீரமாகிய பாத்திரத்திலுள்ள எப்போதும் வற்றுததாயுள்ள தேஜஸ்ஸாகிய அமிர்தத்தை தன் கண்களாகிய அஞ்சலியாலும் அவருடைய சொல்லாகிய பெருங்குடத்தில் நிறைந்திருக்கும் ஞானமிர்தத்தை ச்ரவணத்வாரத்தாலும் பானம் செய்தார்.

(25) ஜகத்குருவான ஆசாரியார் அவருடைய குருவான அச்யுதப்ரேக்ஷருடன் தத்வவிசாரம் செய்யும்பொழுது அச்சமயம் விளையாட்டாய் மாச்சரியமின்றி சங்கரபாஷியத்தின் நேர்மையைப்பற்றி விவாதம் செய்யவும் குருவான அச்யுதப்ரேக்ஷர், ஹேமத்வாசாரியாரே! நீர் உண்மையாய் ஸூத்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதை அறிந்திருந்தால் நீர் உங்களுடையதாக ஓர் பாஷியத்தை செம்மையாய் இயற்றுங்களேன் என்று கோபக்குறலுடன் பேசினர். (26) பரம ஹம்ஸரெனப்படும் யதிகளின் சிரேஷ்டராகிய ஸ்ரீமத்வாசாரியார், ஹம்ஸ சிரேஷ்டமானது எப்படி சுத்தமான பாலை மட்டில் ஸ்வீகரிக்குமோ அப்படி குருவான அச்யுதப்ரேக்ஷர் சொன்னதில் பாஷியத்தைச் செய் என்று சொன்ன அந்த குருவின் விதானத்தை மட்டில் எடுத்துக்கொண்டார். அந்த பாலில் கலந்திருக்கும் ஜலத்தை ஹம்ஸம் எப்படி உபேக்ஷை செய்யுமோ, அப்படி அவர்



அந்த குருவின் வாக்யத்தில் அடங்கியிருந்த உபயோகமில்லாததான கோபத்வனியுடன் சொன்ன ஆக்ஷேபணையை லக்ஷியம்செய்யாமல் விட்டு விட்டார். ஸாதுஜனங்கள் தோஷங்களிருந்த போதிலும் அவைகளைப் பொருட்படுத்தாமல் குணபாகத்தில்தான் சந்தோஷப்படுவார்கள். (27) ஒரு ஸமயம் அந்த மத்வாசாரியாரிடம் ஸன்யாஸித்தன்மைக்கு பூஷணமாயுள்ள வைராக்யம் தைரியம் நல்லபேச்சு முதலான குணங்களைக் கொண்டவரும் விஷ்ணுவிடம் விசேஷமான பக்தியுள்ளவருமான லிகுசவம்சத்தவராயுள்ள, மத்வாசாரியாருக்கு முன்பு அச்யுதப்ரேக்ஷரிடம் ஸன்யாஸம் பெற்றவரான ஜ்யேஷ்ட ஸன்யாஸியார் ஒருவர் வந்து அவரைப்பார்த்து இவ்வாறு பேசினர். (28) சங்கராசாரியார் இயற்றியுள்ள இந்த பிரம்மஸூத்திரபாஷ்யம் முதலிய நூல்கள் வேதாந்தமாகிய பிரம்ம மீமாம்ஸா சாஸ்திரத்தின் சித்தாந்த ஸம்பவத்திற்கு எதிரிடையாய் இருக்கும் பக்ஷத்தில், அப்படியே இருக்கட்டும். அதனால் நமக்கு என்ன பாதகம். ஞானியான மத்வாசாரியாரே! நீர் எங்கள் பொருட்டு பிரம்ம ஸூத்ரங்களாலும் உபநிஷத்துகளாலும் வெளியிட விரும்பியிருக்கும் அவைகளுக்குள்ள சரியானதாய் எல்லா பிரமாணங்களுக்கும் விரோதமாய் இல்லாததான அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள். (24) இவ்வாறு மங்கள பூர்ணமான அந்த ஜ்யேஷ்டயதியின் வாக்யத்தால், பிரம்மசூத்திரத்தின் உண்மையான அர்த்தத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று இருந்த எல்லா ஸாது ஜனங்களின் ஆசையானது, எப்படி ஆசையாகிய எல்லாதிக்கும் சரத்காலத்திய மங்களமான பூர்ணிமா சந்திரனல் பிரகாசிக்குமோ அப்படி பிரகாசமாய் வெளியாகவும், விஷ்ணுபதமாகிய ஆகாயத்தை பிரகாசப்படுத்தும் அந்த சரத்காலத்திய பூர்ணிமா சந்திரனின் நிலவுபோல் விஷ்ணுவின் பதமாகிய ஸ்வரூபத்தை பிரகாசம் படுத்துவதாயுள்ள அந்த ஆநந்ததீர்த்தரின் சந்திரவதனத்தினின்றும் வெளியான அர்த்த விசாரமெனப்படும் சந்திரிகை பிரகாசிக்கத் தொடங்கியது.

(30) ஒருஸமயம் மத்வாசாரியார் திக்விஜயம் செய்வதற்காக வெண்ணும் குருவான அச்யுதப்ரக்ஷதீர்த்தருடன் உடுபியிலிருந்து

அதன் தென் திசைக்கு பிரயாணம் செய்து விஷ்ணுமங்களம் என்னும் ஊருக்குவந்து அங்குள்ள ஜகத்திற்கு மங்களத்தைத் தருபவரான ஸ்ரீவிஷ்ணுவை நமஸ்கரித்தார். (31) அந்த ஊரில் பிக்ஷையளித்த ஒருவர் மத்வாசாரியார் அதிகமாய் போஜனம் செய்வார் என்று கேட்டிருந்ததை பரீக்ஷித்தறிய, அன்று அவர் போஜனம் முடியும் காலத்தில் அந்த தேசத்து, கதளீ எனப்படும் பெரும் வாழைப்பழங்களின் ராசியை, மேன்மேல் சாப்பிடத் தரவும், அவைகளெல்லாவற்றையும் மத்வாசாரியார் சிறிதும் சிரம மன்னியில் சாப்பிட்டுவிடவும், அதைக் கண்டு அச்சுதப்ரேக்ஷர் அடங்கா ஆச்சரியமடைந்து மிக்கபெரியாரான மத்வாசாரியாரைப் பார்த்து, இரகசியத்தில் இவ்வாறு பேசினார். (32) பரிசுத்தமான மனதுடையவரே? பிக்ஷையின் முடிவில் இருநூறுக்கு அதிகமாய் கணக்குள்ள பெருத்த வாழைப்பழங்களையும், அன்னபக்ஷ்யபாய ஸாதிகளையும் நீர் பூரா உண்டு, உங்கள் வயிறு நிறைந்திருந்தும் அந்த உங்கள் சிறிய வயிற்றில் பாரம் ஏன் ஏற்படவில்லை. என்பதை உண்மையாய்ச் சொல்லுங்கள். (33) இவ்வாறு அச்யுதப்ரேக்ஷர் கேட்கவும், ஜகதீசுவரனை ஸ்ரீநாராயணனை ஸ்மரித்து மத்வாசாரியார்! குருவே! என் வயிற்றுக்குள் இருந்துவரும் அக்னி கட்டைவிரல் அளவு உள்ளதாய் நன்றாய் ஜொலித்துக் கொண்டிருப்பதையும், அது எப்பொழுதுமே எனக்கு சௌக்கியத்தையே தந்து வருகிறதென்பதையும், ஆனால் அது ப்ரளயகாலத்தில் ஜகத்தையும் கொளுத்தக்கூடிய தென்பதென்பதையும் அறிந்துகொள்ளுங்கள் என்று பதில் சொன்னார். (34) மனோகரமான யசஸ்ஸையுள்ள இந்த மத்வாசாரியார் விஷ்ணுமங்களத்திலிருந்து புறப்பட்டு எல்லோரும் போகக்கூடிய ஒழுங்கான வழியாய், நாலாபக்கங்களிலும் நிறைந்திருக்கும் அநேக நதி ஸமூகங்களுள்ளதும், அந்தந்த தேசத்திய தர்மங்களைக் கொண்டதும் பலவகை வஸ்துக்கள் உற்பத்தியாகி அவைகள் பூர்ணமானதுமான அநேக தேசங்களையும், அப்படியே ஆங்காங்கு கூடிய அநேக பண்டிதர்களின் அநேக விதமான வாதார்த்தங்களைக் கொண்டதும், நியாய சாஸ்திரத்தின் யுக்திகளுடன் சேர்ந்திருப்பதும், பலவகை அர்த்த விசேஷங்கள் கலந்துள்ளனவான அநேக சாஸ்திர சித்தாந்தங்களையும் கடந்து, என்றால், அந்தந்த தேசங்களுக்கு போய் அங்குள்ள வாதிகளை ஜயித்து முன்னடி அதன் தெற்கு பிராந்தியங்களுக்கு பிரயாணமானார்.

(தொடரும்)



# மகாலட்சுமி.

(முன் 271-ம் பக்கம் தொடர்ச்சி.)

ஆகவே ஸமுத்திரத்தில் படுத்திருப்பவரும் ப்ரம்மாண்டத்தை வீரியமாகக்கொண்டவரும் லோகாதாரமான பத்மத்தை நாபியில்கொண்ட பத்மநாபனும் அங்கு அந்த பத்மத்தில் சதுர்முகனைப்பெற்றவனும் ஆகிய இந்த எல்லா லக்ஷணங்களெல்லாம் ஸ்ரீநாராயணனுக்குத்தானிருந்து வருவதால் ஸ்ரீமகாலட்சுமிக்கு காரணன் நாராயணன்தான் என்று நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறது. உத்தம ஸ்திரீ தன் பதியின் நாமத்தை ஸ்பஷ்டமாய் சொல்லக்கூடாதாகையால் மகாபதிவ்ரதையான மகாலட்சுமி தன் பதி நாராயணன் என்பதை அவருடைய அசாதாரணமான லக்ஷணங்களால் சுருதியில் விளக்கியிருப்பதாய்ச்சொல்லவேண்டும். இந்த அம்பாணி சூக்தவாக்யம் நாராயணனுக்கு மகாலட்சுமி குறைந்தவளென்பதற்கு பிரமாணமாகிறது.

(2) கடசுருதியில் இந்திரியேப்ய: பராஹ்யர்த்தா: அர்த்தேப்யஸ்ச பரம்மன:] மனஸஸ்து பராபுத்தி: புத்தேராத்மா மஹான்பர:] மகத: பரம் அவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர:] புருஷாத் நபரம் கிஞ்சித் ஸாகாஷ்டா ஸாபராகதி: என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அபிப்பிராயமாவது, ச்ரோத்ரம் தவக்ஜிஹ்வ வைக்ராணம் வாக்பாணி பாயுஉபஸ்தம் என்ற கர்மேந்திரியங்கள் ஞானேந்திரியங்கள், இவைகளின் அபிமானிதேவர்கள், இவர்களைவிட சப்தம் ஸ்பரிஸம் ரூபம் ரஸம் கந்தமாகிய விஷயங்கள், அவைகளின் அபிமானி தேவர்களான ஸௌபர்ணிதேவி வாருணிதேவி பார்வதிதேவி இவர்கள் உத்தமர்கள். அர்த்தாபிமானிகளான இம்மூன்று தேவர்களைவிட மனோபிமானியான கருட சேஷருத்திரர்கள் உத்தமர்கள். மனோபிமானிகளான இந்த தேவர்களைவிட புத்திதத்வத்திற்கு அபிமானியான ஸரஸ்வதிதேவி உத்தமமானவள், அவளைவிட மஹத்தத்வாபிமானி

யான சதுர்முகன் உத்தமன். அவரைவிட அவ்யக்தமெனப்படும் பிரகிருதிக்கு அபிமானியான மகாலட்சுமி உத்தமி. மகாலட்சுமி தத்வத்தைவிட புருஷ நாமகனான நாராயணன் உத்தமன், அந்த நாராயணனைவிட உத்தமர் யாருமில்லை. அவர்தான் தேவர்களின் தாரதம்மியத்திற்கு முடிவானவர், அவரே கடைசியில் அடையத்தகுந்தவர் என்று. இதனால் மகாலட்சுமியைவிட நாராயணன் ஸர்வோத்தமன் என்று ஏற்படுகிறது.

(3) கௌபவனசுருதி, த்வாவேதௌ அநாதிநித்யௌ அநாதியுக்தௌ நித்யமுக்தௌ, அநாதிச்ருதௌ நித்யச்ருதௌ, யோயம் பரமோ யாசப்ரகிருதி ரமதேஹ்பஸ்யாம் பரம: ரமதேஹ்யஸ்மின் பிரகிருதி: ஸ்வஸ்மின் ஹிபரம: ரமதே நஸ்வஸ்மின் ப்ரகிருதி; அதரனமாஹ: பரம: என்று கூறுகிறது. ப்ரகிருதியான லட்சுமியும் பரமனான நாராயணனும் ஆகிய இருவர்களும் சரீரத்தால் ஆதி அந்தமில்லாதவர்கள், அநாதிகாலத்தில் ஒருவருக்கொருவர் சேர்ந்தவர்கள்; நித்ய முக்தர்கள், அநாதிகாலமாய் பூர்ணர்கள். இந்த மகாலட்சுமியிடம் நாராயணர் ரமணம் செய்கிறார். இந்த நாராயணரிடம் மகாலட்சுமி ரமணம் செய்கிறாள். நாராயணர் தம்மிடமே ரமணம் செய்கிறார், ஆனால் மகாலட்சுமி தேவியார் தம்மிடம் ரமணம் செய்வதில்லை. ஆகலால் தான் இந்தநாராயணனை பரமன் ஸர்வோத்தமன் என்று ஞானிகள் கூறுகின்றனர்.

(4) அஸமாவேதௌ ப்ரகிருதிஸ்ச பரமஸ்ச விசேஷேஹி ப்ரகிருதௌ ஸம்ஸாரமேதி விலீன: பரமேஹ்ய மிருதத்வமேதி என்று ஸௌபர்ணசுருதி அறிவிக்கிறது. என்னவென்றால் ப்ரகிருதியாகிய மகாலட்சுமி நாராயணன் இருவர்களும் ஸமானமில்லாதவர்கள். ப்ரகிருதியிடம் மனது பதிந்தால் ஸம்ஸாரத்தை அடைகிறான். நாராயணனிடம் மனது பதிந்தால் மோக்ஷத்தை அடைகிறான். என்றிருப்பதைக் கொண்டு ஸம்ஸாரத்தைத்தருபவனைவிட மோக்ஷத்தை தருபவர் உத்தமரன்றோ?

(5) ஸர்வத: ப்ரகிருதி: ஸூக்ஷ்மா ப்ரகிருதே: பரமேச்வர:] ஞானனந்தௌ ததைச்வர்யம் குணாஸ்சான்யே அதிகா: ப்ரபேஸ்



என்று தூரச்ருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் ப்ரம்மாதிகளைவிட ப்ரகிருதிதேவி ஸூக்ஷ்மமானவள், ப்ரகிருதியை விட நாராயணன் ஸூக்ஷ்மமானவர். ஆனால் லக்ஷ்மீதத்வத்தை விட நாராயணருக்கு ஞானம் ஆனந்தம் ஐசுவரியம் முதலானவைகள் அதிகமானவைகள் என்று தெரியவருகிறது. இதனாலும் நாராயணர் மகாலட்சுமியைவிட உத்தமர் என்று சொல்லப்பட்டதாயாகிறது.

(6) பவிஷ்யத்பர்வம் என்ற நூலில் "தேசத: காலதஸ்சைவ ஸமாப்ரகிருதிரீச்வரே] உபயோரப்யபத்தத்வம் ததபந்த; பராத்மன:] ஸ்வதஏவ பரேசஸ்ய ஸாசோபாஸ்தே ஸதாஹரிம்] ப்ரகிருதே: ப்ராகிருதஸ்யாபி யே குணாஸ்தேது விஷ்ணுனா] நியதா நைவகேனாபி நியதாஹி ஹரேர் குணா;]]" நாராயணனும் ப்ரகிருதியும் தேசத்தாலும் காலத்தாலும் ஸமானர்கள். இருவர்களுக்கும் நித்ய முக்தன்மை என்பது உண்டு. பரமாத்மாவுக்கு மேற்கூறிய அபந்தமென்ற முக்தத்தன்மை சுயமாகவே என்றால் ஒருவருக்கு பராதீனமில்லாமலேயே உண்டு. அந்த ப்ரகிருதி தேவி எந்த காலத்திலேயும் ஸ்ரீஹரியை உபாஸிக்கிறாள். ப்ரகிருதிதேவிக்கும் அவளுடைய சம்பந்த மடைந்த ஜகத்துக்கும் இருக்கும்குணங்கள் விஷ்ணுவால்பரிமிதமானவைகள். ஆனால் ஸ்ரீஹரியின் குணங்கள் யாராலும் பரிமிதமானவைகள் அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் நாராயணன் மகாலட்சுமியை விட உத்தமர் என்று ஏற்படுகிறது.

(7) மேலும் பிரம்ம மீமாம்ஸாசாஸ்திரமாகிய பிரம்ம ஸூத்திரத்தில் ஸ்ரீவேதவியாஸர் மூன்றுவது அத்தியாயம் மூன்றுவது பாதத்தில் 41-வது ஸூத்திரத்தில் ஓம் ஆதராத் அலோப: என்றார். மகாலட்சுமி அபத்தளாயினும் என்றால் கட்டுக்கு அடங்காதவளாயினும் அதாவது ஸம்ஸாரியாய் இல்லாதவளாதலால் அவளுடைய காரியங்கள் நிறைவேறியிருந்து வருவதன் நிமித்தம், அவள் பகவானை உபாஸிக்காமல் இருந்துவருவதாய் என்னாதீர்கள்; ஆதராத் அலோப: அவள் பந்தனமில்லாதவளா

யிருந்தாலும், ஆதாரத் பக்தி விசேஷத்தால் அவள் செய்யும் உபஸனதிகளை குறைக்கிறதில்லை. அவ்வாறே பிருஹத்தந்திர மென்று நூலிலும் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கு சொல்வதாவது, யதாஸ்ரீநித்ய முக்தாபி ப்ராப்தகாமாபி ஸர்வதா] உபாஸ்தே நித்யசோ விஷ்ணும் ஏவம் பக்தோஹரேர்பவேத்]| இதன் தாத்பர்யமாவது. மகாலட்சுமி நித்யமுக்தளாயும் அவாப்த ஸமஸ்த காமனையுள்ளவளாயும் இருந்தாலும்ஸாக்ஷாத் நாராயணனை, எப்போதுமே உபாஸிக்கிறாள். இப்படித்தான் எந்தக்காரணமுமில்லாமல் அதாவது நிருபாதிகமாய் விஷ்ணு பக்தன் ஹரியை உபாஸிப்பான் என்று இவ்வாறு இருப்பதால் மகாலட்சுமி பகவானை விசேஷமாய் எல்லோரை விட அதிகமாய் நிருபாதிகமாய் ஆராதிப்பவள்என்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது.

(8) மேலும் அதே மூன்றாவது பாதம் நாற்பதாவது சூத்திரத்தில் ஓம்காமாதீதரத்ர தத்ரசாயதனாதிப்ய: என்று ஸ்ரீவேத வியாஸர் அறிவித்திருக்கிறார், மகாலட்சுமி, சீதை ருக்மணி முதலான ரூபங்களால் ஜனன மரணாதி பலவகை ஸம்ஸார துக்கங்களைக் கொண்டதால்; இவ்வகை ஸம்ஸாரத்தை நிவிருத்தி செய்வதாயுள்ள பகவானுடைய தரிசனத்திற்கு ஸாதனமான பகவத் உபாஸனையில், மகாலட்சுமிக்கும் அதிகாரம் உண்டுதான். அவள் பிராணனைவிட உத்தமியாயுமிருக்கிறாள். ஸம்ஸாரிகளுக்கும் ஸாதுக்களுக்கும் பகவத் உபாஸனை அவசியமாதலால் சந்தோக சுருதியில் பகவத் உபாஸகர்களான நாமாதிதேவர்களின் ஜாபிதாவில்,பிராணன் வரையில்தான் ஏனோ சொல்லப்பட்டிருக்கிறது. மகாலட்சுமியை ஏன் அதிகாரிகளில் சேர்க்கப்படவில்லை, அவளை சேர்த்துச்சொல்லவேண்டியது அவசியமே. அதிகாரிகள் பிராணனோடு முடிகின்றனர் என்று சொல்வது சரியல்ல,என்று பூர்வபக்ஷம் வரவே, இந்த ஸூத்திரத்தினால் சித்தாந்தம் செய்யப்படுகிறது. மகாலட்சுமி மூலஸ்தானமான வைகுண்டாதி பகவானுடைய சமீபத்தில் சுவேச்சையாய் மூலரூபத்துடன் இருந்தே பூலோகம் முதலான இடங்களில் சீதை முதலான அவதாரங்களை [illegible] இச்சைப்படி செய்கிறாள். ஈசுவர இச்சையை [illegible]



யுள்ள தன் இச்சையின்பேரில் மூலஸ்தானத்திலிருந்துவரும் அவருடனே இருந்து, அவருடன் கூடவே அவதாரங்களைச் செய்கிறாள் என்றார். ஸர்வாயதனா ஸர்வகாலா ஸர்வேச்சா ஸர்வக்ஞா நபத்தா பந்திகா சைஷா ப்ரக்ருதி: அவிக்ருதி: என்று வத்ஸசுருதியும் அறிவிக்கிறது. மகாலட்சுமி எல்லா தேசத்திலேயுமிருக்கிறாள். எல்லாமே அவள் இச்சைக்கு கட்டுப்பட்டுஇருக்கிறது. அவள் எல்லாவற்றையும் அறிந்தவள் அவள் சுயம் ஸம்ஸாரமில்லாதவள். ஜீவர்களுக்கு ஸம்ஸாரத்தைக் கொடுப்பவள், இப்பேர்ப்பட்டவள் மகாலட்சுமி என்று இதன் பொருள். நாமாதிதேவர்கள் ஸம்ஸாரிகளானதால் அவர்களுக்கு முக்தியைத்தருபவன் நாராயணனாதலால் அந்த உபாஸனை செய்கிறவர்களைமட்டும் சொல்லப்பட்டதென்றும் மகாலட்சுமி ஸம்ஸாரியாய் இல்லாததாலும் நித்யமுக்தளாயிருப்பதால் அவள் முக்தியை வேண்டாதவளல்லாததாலும் அந்த ஜாப்தாவில் சொல்லப்படவில்லை என்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதனால் மகாலட்சுமி பகவானுடைய இச்சையின்பேரில்தான் அவதாரம் செய்கிறாள் என்று ஏற்படுகிறது. (தொடரும்)

---

# ஸ்ரீவாதிராஜஸ்வாமிகளின் சரித்திரம்.

(முன் 268-ம் பக்கம் தொடர்ச்சி)

யாருக்கு என்னவகை ஜ்வரபாதை ஏற்பட்டிருந்த போதிலும், அவர் நேரகவோ தம் பந்துக்கள் மூலமாகவோ தன்னிடம் விக்ஞாபனம் செய்து கொண்டால், ஸ்ரீவாதிராஜர் உடனே ஓர்வகை பரிகாரம் சொல்லி, மறுநாளே ஜ்வரபாதை நீங்கும்படி செய்து வந்தார். இதனால் ஸ்ரீவாதிராஜர் ஜ்வரத்துக்கு ஓர் பெரிய சத்ரு வென்று ஸாமானியர்கள் சொல்லிவந்தனர். இப்படியிருக்க ஒருஸமயம் ஜ்வரத்துக்கு அபிமானி தேவதை ஜ்வரனெனப்படுகிறவன் மானிட உருவங்கொண்டு ப்ரத்யக்ஷமாய் ஸ்ரீவாதிராஜரின் எதிரில் தோன்றி, ஏகாந்தத்தில் மகாஸ்வாமி! நான் யாரைப் பிடித்தாலும் தாங்கள் என்னை அங்கிருந்து விரட்டி விடுகிறீர்கள். எனக்கு இந்த பிராந்தியத்தில் இருப்பிட மில்லாமல்

செய்து விட்டீர்கள். தங்களால் எனக்கு கௌரவமே இல்லாமல் போய் விட்டது. என்னைக் கண்டு எல்லோரும் நடுங்கிக்கொண்டிருந்தது போய், என்னை இழிவாய்ப் பேசுங்காலம் தங்களால் ஏற்பட்டுவிட்டது. இதனால் எனக்கு மிகுந்த துக்கமும் ஹிம்சையும் ஏற்பட்டிருக்கிறது. என் ப்ரபாவம் இப்பேர்பட்டதென்பதை உலகத்தார் அறியும்படி தாங்கள் எல்லோரிடமும் போல், என்மீதும் கருணைவைத்து அருள்புரிய வேண்டும். அதற்கு தாங்கள் என்ன உபாயம் செய்வீர்களோ, நான் அறியேன். தாங்கள் தான் சரணம் என்று ப்ரார்த்தித்தான். ஸ்ரீவாதிராஜர் சிரித்துக்கொண்டு, ஜ்வரமே! ஏன் இப்படி என்னை குறைகூறுகிறாய், உன் மகிமை அபாரமானது தான்; அப்படி உனக்கு உன் சக்தியை விளக்கவேண்டுமென்று அபிப்பிராயமிருந்தால், என் சரீரத்தினுள்ளேயே சீக்கிரமே நீ ப்ரவேசம் செய், அதனால் நான் சிறிது காலம் உலகத்தார் அறிந்துகொள்ளும்படி உன் சங்கடத்தை நான் பூராவாய் அனுபவிக்கிறேன். இதற்கு சற்றும் அஞ்சாதே. ஸ்ரீவாதிராஜரையும் ஜ்வரம் பிடித்து வாட்டிய தென்றால் ஜ்வரத்தின் சக்தி எவ்வளவு பலிஷ்டமான தென்று ஜனங்கள் உன்னை மீண்டும் கொண்டாட ஆரம்பிப்பார்கள். உனக்கு ஏற்பட்டிருக்கும் அபக்யாதியும் தொலையும். அதற்கு இதுதான் உபாயம் என்று சொல்லி, ஜ்வரதேவதையிடம் அனுக்ரஹம் செய்தார். ஜ்வரம் அதன்படியே ஸ்ரீவாதிராஜரிடம் பிரவேசிக்க, ஸ்ரீவாதிராஜர் குளிர் ஜ்வரத்தால் நடுநடுங்கி பெருமூச்சு விட்டுக்கொண்டு போர்த்து படுத்துவிட்டார். இவ்வாறு வெகுகாலம் ஜ்வர பாதையை அனுபவித்தார். ஆனால் தினந்தோறும் காலையில் பூஜாகாலம் வந்தவுடன், ஸ்ரீவாதிராஜர் தன் சரீரத்தினுள்ளே யிருக்கும் ஜ்வரத்தை, தன் மந்திர சக்தியால் சரீரத்தினின்றும் வெளியாக்கி, தன் தண்டகாஷ்டத்தினுள்ளே இருக்கச் செய்து விட்டு, படுக்கையைவிட்டு எழுந்து ஸ்நானம் செய்து, நித்தியகர்மானுஷ்டானங்களைமுடித்து, தேவபூஜாதிகளைச்செய்து, தீர்த்தப்ராசனம்செய்துவிட்டு, மீண்டும்படுத்துவிடுவார். ஜ்வரம் பிரவேசிக்கும் அந்த ஸமயத்தில் அந்த தண்டகாஷ்டம், எல்லோர் பார்த்திருக்கையில் கடகடவென்று நடுங்கி வந்தது. கைக்கு சுட்டுக்கொண்டிருந்தது. இதைக் கண்டு எல்லோரும் மிக்க ஆச்சரியமடைந்து ஸ்ரீவாதிராஜரின் சக்தியைக் கொண்டாடினார்கள். ஒருஸமயம் ஓர் எலியை விரட்டிக்கொண்டு ஓர் கிருஷ்ண ஸர்ப்பம் ஓடிவரவும், அந்த எலி பயந்து ஸ்ரீவாதிராஜர் உட்கார்ந்திருந்த ஆஸனத்தின் கீழே ஓடிப்போய் பதுங்கி விட்டது. பின்னாடியே ஸர்பம் ஓடிவரவும், அது ஸ்ரீவாதிராஜரின் ஸமீபம் வந்தவுடன், அதன் ஸ்வா புத்திமாறி ஒன்றும் தோன்றாமல் [illegible]



அவருடைய ஸன்னதியிலேயே எல்லோர் பார்க்கையில் அது படுத்து விட்டது. அது ஸ்ரீவாதிராஜரை சரணம் புகுந்ததோவென்று பலர் எண்ணினார்கள், ஸ்ரீவாதிராஜர் சிரித்துக்கொண்டு அதன் மீது தீர்த்தத்தை ப்ரோக்ஷித்து அந்த ஸர்பத்தை தனக்கு ஸ்வாதீனமாகச் செய்துகொண்டு, அதை தன் தண்டகாஷ்டத்திலேயே வசித்துயிருக்கும்படி செய்திருந்தார். தன்னை சரணமாக அடைந்த அந்த எலியும் ஸ்ரீவாதிராஜரிடம் மிக்க அன்புகொண்டு அவருடனே வெகுநாள் இருந்ததுமல்லாமல், அந்த கிருஷ்ணஸர்ப்பத்தின் பயமும்போய், வைரபுத்திவிட்டு சமாதானமடைந்து ஒருங்கே சுகமாய் வாழ்ந்திருந்தன. இதைக்கண்டு எல்லோரும் ஆச்சர்யமடைந்தனர். ஸ்ரீவாதிராஜரின் மகாமகிமைகளை ஒருவாறு சுருக்கிச் சொல்லும் ஸ்ரீவிருத்தரத்னஸங்கிரஹமென்னும் நூலை இயற்றிய ரகுநாதாசாரியார் என்பவர் ஸ்ரீவாதிராஜரின் முக்யபக்தர். அவர் சிறுகுழந்தையாயிருக்கும்பொழுது, அவருக்கு முந்தி பிறந்திருந்தகுழந்தை இறந்துபோய், அவருடைய தாயிக்கு தனப்பால் அதிகமாய் உற்பத்தியாகி அதனால் அவள் மிக்க சிரமமடைந்து, தன் தனப்பாலை பலாத்காரமாய் பிழிந்து வெளியாக்கிக்கொண்டும் மருந்துகளை தடவிக்கொண்டும் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தாள். இதைக்கண்டு, இந்த பாலன் அம்மா! அந்தப்பாலை ஏன் வீணாக்குகிறாய்; ஏன் சிரமப்படுகிறாய் நான் வேண்டுமானால் அதை பூராவாய் குடித்துவருகிறேன் என்று சொல்லி, அந்ததனப்பாலை குடிக்க ஆசைப்பட்டார், ஆனால் ஒன்றிரண்டுநாளைக்குள் அந்தப்பால் ஒழுகுவது நின்றுபோய்விட்டது. அந்த பிராயம் முதற்கொண்டே அவர் ஸ்ரீவாதிராஜரிடம் மகா பக்திமானதலால் வீட்டிலிருந்த ஸ்ரீவாதிராஜரின் கால் மிருத்திகையை எடுத்துக்கொடுத்து ஸ்தனங்களின்மீது அதை தடவச் செய்ய, ஸ்தனப்பால் முன்னேவிட பன்மடங்காய் விருத்தியாகி அவருடைய மனோரதம் நிறைவேறியது. அவருடைய பற்களும் திடப்பட்டது, என்றிவ்வாறு ஸ்ரீவாதிராஜரின் மிருத்திகையின் மகிமையைக்கொண்டாடியிருக்கிறார். அவர் சொல்லிக்கொண்டிருப்பதாவது:— "அஹோ ப்ரத்யக்ஷமேதஸ்ய மாகாத்மியம் ச்ரூயதாம் ஜனா:। தத்பாத மிருத்திகாலேபாத் ஸத்யோ துக்தமபூத்ஸ்தனே.। துக்தபாராஸஹர்த்யாபி நாசிதம் யத்னதஸ்தனே। புனஸ்தத்பாத மிருத்லேபமாத்ராத்துக்தம் பபூவஹ॥ ஸ்ரீவாதிராஜ ஸ்ரீபாதமிருதோதாரணதோ முகே। சிதிலா அபிமேதந்தா தார்ட்யம் ஆபுரஹோபுன:॥"

## ஸோதா ராஜ்யம் கிடைத்தது.

வடகன்னடம் ஜில்லா சிரஸி தாலுக்காவிலுள்ள ஸோதாபுரத்தை அந்த ஸமயம் லிங்காயதமதத்தானான ஓர் சைவ அரசன் அரசு புரிந்து வந்தான், அவனுக்கு ஓர் லிங்காயத சைவனான குரு இருந்துவந்தார். அவரை பரமசிவனின் அவதாரமென்றே அவ்வூரார் அனைவரும் எண்ணியிருந்தார்கள். அவ்வாறு நினைக்க அவன் அமானுஷமான காரியங்களைச்செய்து வந்தார். அரசன் சபையில் வீற்றிருக்கையில் எல்லோரும் பார்த்திருக்கும்பொழுது, அவர் ஆகாயத்தில் அந்தரத்திலிருந்து கீழே

இறங்குவார். கைலாயத்திற்குச்சென்று பார்வதி பரமசிவன் இவர்களை தரிசித்து அவர்களுடன் தினம் பேசிவருவதாய்ச்சொல்லிவந்தார். உலகில் எங்கும் சைவமதமே பரவும்படி செய்யவேண்டுமென்றும், பூணூல் தரித்திருக்கும் வைதீக ப்ராம்மணர்களின் யக்ஞோபவீதத்தை எல்லாம் அறுத்து, அவர்களை லிங்காயதர்களளாய்ச்செய்யயவேண்டுமென்றும். இவ்வாறு ப்ராம்மணர்களின் அறுத்த யக்ஞோபவீதம் 5 மணு பாரம் ஆக வேண்டுமென்றும் பரமசிவனின் ஆக்ஞையாகி இருப்பதாய் அறிவித்திருந்தார். பரமசிவனின் கட்டளை என்று இந்த வார்த்தையை நம்பி, அந்த அரசனும் அவ்வாறே தன் ராஜ்யத்திலுள்ள ப்ராம்மணர்களை எல்லாம் யக்ஞோபத்தை அறுத்து லிங்காயதர்களாய் ஆக நிர்பந்தித்து வந்தான். அதற்கு சம்மதிக்காத பிராம்மணர்களை பலவாறு ஹிம்சை செய்து அவர்களைக்கொன்றுவந்தான். அவர்களை யானையைவிட்டு மிதிக்கச்செய்வதும், த்ரிசூலத்தில் ஏற்றுவதும், எரியும் நெருப்பில் தூக்கிப்போடுவதும், மலையிலிருந்து கீழே உருட்டுவதும் அந்த அரசனுடைய வழக்கமாயிருந்துவந்தது. சில நாளைக்கெல்லாம் தன் ராஜ்யத்திலுள்ள ப்ராம்மணர்களைஎல்லாம் இவ்வாறு அழித்துவிட்டதுமன்றி, ராஜ்யத்திற்கு வெளியேயுள்ள பிராந்தியத்திலுள்ளவர்களையும் ஹிம்ஸிக்கத்தொடங்கினான். பிரம்மண்யதேவனான பகவான் நாராயணன் இந்த ப்ரமஹத்தியைக்கண்டு ஸகியாமல் மனமிரங்கி அந்த அரசனுக்கு சத்ருபாதை ஏற்படும்படி செய்தார்.

(தொடரும்.

# வருஷாந்தரத்தில் நடத்த வேண்டிய விரதங்களின் மாகாத்மிய குறிப்பு:

சைத்ரமாஸம் சுக்லபக்ஷம் ப்ரதமை:—சுவேதவராக கல்பமாகிய இந்த கல்பத்தில் இன்று காலையில்தான் சதுர்முகன் ஜகத்தை சிருஷ்டித்தார். ஸம்வத்ஸர ஆரம்பதினம். அப்யங்கம் அவசியம். இல்லாவிடில் பாபம். தண்ணீர்பந்தல் போடுவதும் உதகும்பம் போடுவதும் ஆரம்பிக்கலாம். ஸ்ரீராமநவமி நவராத்ரி ஆரம்பிக்கும் நாள். திருதியை. பரமசிவனுடன் கௌரியை பூஜிக்கவேண்டும். நவமி. ஸ்ரீராமநவமி. இன்று உபவாஸம் கூடாது. பகவானுக்கு விசேஷமான பூஜை, ராமாயண பாராயணம் முதலியவை செய்ய வேண்டும். தசமி. இன்று முதலே வைசாக ஸ்நானம் ஆரம்பிக்கலாம். ஏகாதசி. இன்று லட்சுமியுடன் பகவானுக்கு டோலோத்ஸவம் தொட்டில் பூஜை செய்யவேண்டும். தவறினால் பௌர்ணமி, வைசாக சுத்த த்வாதசி ச்ராவண சுத்தத்த்வாதசியில் செய்யலாம். செய்யாவிட்டால் பாபமுண்டு. பௌர்ணமி. இன்று சித்ருப்தாதியமபடர்களின் ப்ரீதிக்காக சித்ரான்னம் சித்ரவஸ்திரம் முதலியவைகளை தானம் செய்யவேண்டும்,



வைசாகம். சுக்லபக்ஷம் அக்ஷயத்ருதியை இன்று ஸ்நானம் தானாதிகள் சொல்பமாய் செய்தாலும் அக்ஷயமாகும். பித்ரு தர்பணத்தைச் செய்யவேண்டும். உதகும்பதானம் விசேஷபலன். இரவில் எச்சந்தர்பத்திலும் போஜனம் கூடாது. பாபமுண்டு. ஸப்தமி ஜன்ஹுமஹரிஷி காதிலிருந்து ஜான்ஹவி என்று கங்கை உற்பத்தி ஆனநாள். இன்று கங்கைக்கு விசேஷ பூஜை செய்யவேண்டும். த்வாதசி ப்ராம்மணபோஜனம் தானாதிகள் விசேஷ பலனைத் தரும். த்ரயோதசி நரஸிம்மஜயந்தி. நரஸிம்ஹனை குலதெய்வமாயுள்ளவர்கள் அவரவர்களின் சம்பிரதாயப்படி பகவானைப் பூஜிக்க வேண்டும். இதரர்கள் அன்று விசேஷ பூஜாதிகளைச் செய்ய வேண்டும். இதனால் கோடிக்கணக்கான ப்ரம்மஹத்யாதிபாபங்களும் தொலைவதோடு ஸௌபாக்யம் உண்டாகும். பௌர்ணமி வைசாக ஸ்நானத்தை முடித்து அந்த மகாத்மிய புராணத்தில் வியாஸ பூஜையை செய்யவேண்டும்.

ஜேஷ்ட மாஸம் சுக்லபக்ஷம் ப்ரதமை முதல் தசமி வரையில் 10 நாட்கள் கங்கையை பூஜை செய்யவேண்டும். பத்து வகை பாபங்கள் தொலையும் அதனால் தசஹரா என்று பெயர். ஏகாதசி நிர்ஜலமாய் உபவாஸமிருந்து த்வாதசியன்று கற்கண்டு பானகத்தை பிராம்மணர்களுக்குக் கொடுக்கவேண்டும். பௌர்ணமி ஸ்திரீகள் வைதவ்ய சங்கடம் நீங்க ஆலமரத்தின் கீழே ஸாவித்ரிதேவியை த்ரயோதசி முதல் மூன்று நாட்கள் பூஜை செய்து இன்று முடிக்கவேண்டும். இன்று திலதானம் அசுவமேதயாக பலனைத்தரும்.

ஆஷாட மாஸம் சுக்ல பக்ஷம் தசமி வீட்டை பரிசுத்தப்படுத்தி தப்த முத்திரையை குருஜனங்களிடமிருந்து பெற்று சாதுர்மாஸ்ய வ்ரதம் செய்ய சங்கல்பம் செய்து கொள்ளவேண்டும். சாதுர் மாஸ்யம் நான்கு மாதங்கள் நடத்தவேண்டிய விதியைப்பற்றி பின்னடி அறிவிக்கப்படும். இந்த மாதத்தில் தக்ஷிணாயன சங்கிரமணம் முதல் ஒரு மாதகாலம் க்ஷவரம் கூடாது.

ச்ராவண மாஸம் சுக்ல பக்ஷம் சதுர்த்தி பாலர்களுக்கு அநந்த விரதம். அநந்த தோரத்தை கட்டிக்கொள்ள வேண்டும். பஞ்சமி

எல்லோரும் நாகர்களை பூஜிக்கவேண்டும். த்வாதசி விஷ்ணுக்கு பவித்ர மாலைகளை ஸமர்ப்பிக்கவேண்டும். உபாகர்மம் சிரவண நக்ஷத்திரத்தில் ரிக்வேதிகளும் பௌர்ணமியில் யஜுர்வேதிகளும் ஹஸ்த நக்ஷத்திரத்தில் ஸாமவேதிகளும் உபாகர்மத்தையும் உத்ஸர்ஜனத்தையும் அவசியம் செய்துகொள்ளவேண்டும். யக்ஞோபவீதம் தரிப்பதற்கும் வேதாத்யயனம் ஜபாதிகளுக்கும் இந்த உபாகர்மாதிகள் அங்கங்களாகின்றன. இவை இல்லாவிடில் ஜபாதிகள் ப்ரயோஜனமில்லை. கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி கோகுலாஷ்டமி. அன்று உபாஸமிருந்து இரவில் நடுநிசியில் பாலகிருஷ்ணனுக்கும், பலராமர், வசுதேவர், தேவகி, நந்தகோபன், யசோதா, ஸுபத்ரா, ரோகிணி இவர்களுக்கும் மகா பூஜையை நடத்திய பிறகு சங்கத்தால் பாலகிருஷ்ணனுக்கும் பாலசந்திரனுக்கும் அர்க்யாதிகளைக்கொடுத்து மறுநாள் பாரணை செய்யவேண்டும். அமாவாசை உபயோகத்திற்கு தேவையான தர்பைகளை இன்று சேகரித்துக்கொள்ளவேண்டும்.

பாத்ரபத மாஸம் சுக்லபக்ஷம் த்ருதியை பரமசிவனுடன் ஹரிதாளிகா என்னும் பார்வதியை பூஜிக்கவேண்டும். சதுர்த்தி சித்தி விநாயகரை பூஜிக்கவேண்டும். எல்லா அபீஷ்டங்களும் சித்தியாகும். இன்று சந்திரனைப் பார்த்தால் வீண் அபவாதமுண்டாகும். அந்த அபவாதம் நீங்க சிம்ஹ: ப்ரஸேனமவதீத் என்னும் சுலோகத்தைச் சொல்லவேண்டும். பஞ்சமி இன்று ஸப்தரிஷிகளை எல்லோருமே பூஜிக்க வேண்டும். மாதாந்த தீட்டுகள் சம்பந்தப்பட்டபாபம்நீங்க ஸ்திரீகள் பூஜைசெய்யவேண்டியதவசியம். ஷஷ்டி ஸூர்யோதய காலத்தில் ஸ்நானமும் சூரிய பூஜையும் அவசியம். இன்று ஸுப்ரம்மண்யரை தரிசித்தால் பிரம்மஹத்யாதி பாபங்கள் விலகும். அஷ்டமி நவமி ஜேஷ்டை என்னும் துர்க்கையை பூஜிக்கவேண்டும். ஏகாதசி இன்று பகவான் பிரண்டு புரித்துக் கொள்வதாய் தியானிக்கவேண்டும். உத்தரா முகமாய் பகவானை படுக்க வைக்கவேண்டும். இதனால் இன்று விஷ்ணு பரிவர்த்தன ஏகாதசியாகிறது. சதுர்தசி அனந்த பத்மநாபமூர்த்தியை எல்லோரும்பூஜித்து அனந்த தோரக்கயிறை தரிக்கவேண்டியதவசியம்.



ஆயுள் வரை முடிய செய்யவேண்டியவ்ரதம் இது. பிந்திய வருஷத்திய அனந்தக்கயிறு நஷ்டமாய் போனால் பிராயச்சித்தம் உண்டு கிருஷ்ணபக்ஷம் மகாளய பக்ஷமாகும். எல்லா பித்ருக்களை உத்தேசித்து இந்தபக்ஷத்தில் அவசியம் சிராத்தம்செய்யவேண்டும். தினம் தர்ப்பணம் அவசியம். மகாபரணீ வ்யதீபாதம் மத்யாஷ்டமி யதித்வாதசி. மகாலய அமாவாஸ்யைகளில் இந்தச்ராத்தம் செய்யலாம் இறந்த திதி எதுவோ இந்த பக்ஷத்தில் அந்த திதியில் சிராத்தம் செய்வது மகாவிசேஷம். மத்யாஷ்டமியைக்கு ஸமானம். நவமி ஸுவாஸினி ஸ்திரீகளுக்கு செய்யவேண்டிய சிராத்த நாள். த்வாதசி யதிகளுக்கு ச்ராத்தம் செய்ய வேண்டிய நாள். சதுர்தசி அஸ்திரங்களால் வெட்டுப்பட்டு இறந்துபோனவர்களுக்கு சிராத்தம் செய்யப்படவேண்டிய நாள். அமாவாஸை ஸமஸ்த பித்ருகளுக்கும் இன்றுவது திலதர்பணம் செய்யப்படவேண்டும். பித்ருக்களுக்கு மகா திருப்தியை அளிக்கும் நாள். பிரம்ம லோகத்தில் பெரும் கொண்டாட்ட நாள். ஹஸ்த நக்ஷத்திரமும் சேர்ந்தால் கஜச்சாயாயோகம் ஏற்பட்டு மகா புண்யகாலமாகும்.

ஆசுவீஜமாஸம் சுக்லபக்ஷம் பிரதமை முதல் ஒன்பது நாள் நவராத்ரி. பகவத்பூஜை பாராயணாதிகள் விசேஷமான பலன்களைத் தரும். இந்த நாட்களில் மூலா நக்ஷத்திரத்தில் புஸ்தகங்களில் ஸரஸ்வதி பாரதி இவர்களை அபிமானிதேவதைகளாய் தியானித்து இதை தேஜோமயமான ப்ரதிமையாக வைத்து இதில் முக்ய ப்ராணரையும், அவரிடம் வேதவியாஸர், ஹயக்ரீவர், தத்தாத்ரேயர், பரசுராமர், மகிதாஸர் இவர்களை அந்தந்த மந்திரங்களால் ஆவாஹனம் செய்து ப்ரதிஷ்டை செய்து, எதிரில் சாலக்ராமாதிகளை வைத்து ஒவ்வொருநாளும் மூன்றுவேளையிலும் ஷோடசோபசார பூஜை செய்யவேண்டும். மூலாநக்ஷத்திரத்தில் ஆவாஹனம்செய்து சிரவணத்தின் ஆதிபாகத்தில் உத்திஷ்ட ப்ரம்மணஸ்பதே என்ற மந்திரத்தால் விஸர்ஜனம்செய்யவேண்டும். மூலா பூர்வாஷாடா உத்தராஷாடா இந்த மூன்றுநக்ஷத்திரங்களில் எது சேர்ந்தாலும் மகா நவமி எனப்படும். நவராத்ரி உபவாஸம் செய்தவர்களுக்கு தசமியன்று தான் பாரணை. தசமி விஜயதசமி. மாலையில் சமீ (வன்னி)

விருக்ஷத்தை பூஜிக்க வேண்டும். அன்று மாலைப்பொழுதில் விஜயமென்ற முகூர்த்தம் ஸமஸ்த காரியங்களையும் சித்திக்கச்செய்யும். அன்று மத்வஜயந்தி. ஆசாரியாள் பிறந்தநாளை கொண்டாட வேண்டியதவசியமென்றும் இல்லாவிடில் சாசுவதமான நரகமுண்டென்றும் ஸ்காந்த புராணம் அறிவிக்கிறது. இந்த மாஸத்தில் உபவாஸம் கிருச்ரசாந்திராயணாதிகள் செய்யவேண்டும். கிருஷ்ணபக்ஷம் த்வாதசி முதற்கொண்டு 5-நாட்கள் இரவு முதல் யாமத்திற்குள் தேவர்களுக்கு ஆரார்த்திகை செய்யவேண்டும். த்ரயோதசி வெளியில் யமதீபத்தை வைக்கவேண்டும். அதனால் யமபகவான் தன் பரிவாரங்களுடன் திருப்தியடைவார். சதுர்தசி தீபாவளி சந்திரோதய காலத்தில் அப்யங்கம் அவசியம். விதவைகளும், ஸன்யாஸிகளும் கூட எண்ணை தேய்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் நரகம் நிச்சயம். அன்று யமதர்பணம் அவசியம்.

கார்த்தீகமாஸம் சுக்லபக்ஷம், பிரதமை கோபூஜை அவசியம். அப்யங்க ஸ்நானம் செய்யவேண்டும். இரவில் சந்திரோதயத்திற்கு முன்பு தீபங்களை ஏற்றி வைக்கவேண்டும். அபர ராத்ரியில் பலி சக்ரவர்த்தியை கோலத்தில்எழுதி பூஜிக்கவேண்டும். த்விதியை ஸஹோதரி கையால் போஜனத்தையும் ஆரார்த்திகையும் பெற்று அவளுக்கு வஸ்திராலங்காராதிகளை ஸமர்ப்பிக்கவேண்டும். யமன் அவ்வாறு யமுனையால் பெற்று இன்றைக்கு இந்த வரன் கொடுத்தான். ஏகாதசி முதல் பௌர்ணமி வரையில் 5 நாள் மகா பரிசுத்தமான பீஷ்மபஞ்சக விரதம் செய்யப்படவேண்டும். த்வாதசியன்று பகவானை எழுப்பி விடவேண்டும். அன்று மாலையில் துளசி பிருந்தாவனத்தில் பகவானை வைத்து பூஜை செய்யவேண்டும். ஸாலக்ராமத்திற்கு க்ஷீராபிஷேகம் உண்டு. பிருந்தாவனத்துக்கு எதிரில் புஷ்பமாலாதிகளால் விசேஷமாய் பந்தல் போட்டு துளசிக்கும் பகவானுக்கும், விதிபூர்வமாய் விவாஹத்தை நடத்த வேண்டும். சதுர்தசி வைகுண்ட சதுர்தசி. தம்பதிபோஜனம் விசேஷம். பௌர்ணமி கிருத்திகா நக்ஷத்திரமும் சேர்ந்தால் மகா கார்த்திகை. சுவாமிநாதனை ஸுப்ரமண்யரின் தரிசனம் அனந்தபலனைத் தரும். மூன்று இழைகளைக்கொண்ட திரினால்



அநேக தீபங்களை ஏற்றவேண்டும், வனபோஜனம் செய்யவேண்டும், பௌர்ணமி சதுர்தசி த்வாதசி பஞ்சமி இவைகளில் செய்யலாம். கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியன்று காலபைரவரின் பூஜையைச் செய்யவேண்டும்.

மார்கசீர்ஷ மாஸம் சுக்லபக்ஷம் பஞ்சமி நாகபூஜை, ஷஷ்டி ஸ்கந்த ஷஷ்டி. ஸுப்ரமண்யரை பூஜிக்கவேண்டும்.

புஷ்யமாஸம் அமாவாசையன்று பானுவாரமும் சிரவண நக்ஷத்திரமும் வ்யதீபாதயோகமும் சேர்ந்தால் அர்த்தோதய புண்யகாலம். ஏதாவது ஒன்றில்லாதிருந்தால் மகோதயம். மகா பர்வகாலமாகும்.

மாகமாஸம் சுக்லபக்ஷம் ஸப்தமி. ரத ஸப்தமி. சூரியபூஜை அவசியம். சூரிய கிரஹண புண்யகாலத்திற்கு ஸமானமானது. அருணோதயகாலத்தில் ஸ்நானம் மகாபலன். அஷ்டமி பீஷ்மாஷ்டமி. பீஷ்மாசாரியாரைக் குறித்து பீஷ்ம தர்பணம் அவசியம். நவமி மத்வநவமி ஸ்ரீ ஆநந்ததீர்த்த பகவத்பாதாள் மறைந்த நாள். மாத்வர்களுக்கு முக்யப்ராணரின் அனுக்ரஹம் சம்பாதிக்க இணையற்ற நாள். பிராம்மண போஜனம் அவசியம். த்வாதசி பீம த்வாதசி. ஸ்நான தானங்கள் மகாபலனைத் தரும். பௌர்ணமி ப்ராத: ஸ்நானம் அவசியம். கிருஷ்ண பக்ஷம் சதுர்தசி சிவராத்ரி அன்று வைஷ்ணவர்களான மாத்வர்கள் உபவாஸம் செய்யலாகாது, செய்தால் மகாபாபம். அன்று புராணப்ரஸித்தமான சிவ விக்ரஹத்திலோ அல்லது வீட்டிலுள்ள சிவாந்தர்கத முக்யப்ராண ப்ரதிமையிலோ சங்கர்ஷண மூர்த்தியை பூஜையைச் செய்யவேண்டும். அமாவாஸை திலான்னதானம் செய்யவேண்டும்.

பால்குண மாஸம் பௌர்ணமியன்று மன்மத பூஜை, தக்ஷனம் அவசியம். பகவானுக்கு டோலோத்ஸவம் தொட்டில் பூஜை செய்யவேண்டும். கிருஷ்ணபக்ஷம் பிரதமை வஸந்தாரம்பம். சந்தனத்துடன் கலந்து மாம்பூவை பக்ஷணம் செய்யவேண்டும். அப்யங்கம் அவசியம்.

# செய்தித்திரட்டு.

திருநெல்வேலியில் மாத்வா அஸோஸியேஷன் கீழ் வீரராகவபுரத்தில் 13—4—35 உயன்றும் டவுன் உத்திராதி மடத்தில் மகாராஷ்டிர அஸோஸியேஸன் கீழ் 14உ 16உ களிலும் காடகோபநிஷத்தும், ஆனந்த தாரதம்யமும் ஸ்ரீமான் கௌலகி யதுநாதாசாரியாரால் உபன்யஸிக்கப்பட்டதென்று ஸ்ரீமான் வக்கீல் V. R. நரஸிம்மராவ் அறிவிக்கிறார்.

கோயமுத்தூர் ஸ்ரீமத்வஸித்தாந்த புபுத்ஸு ஸபையின் ஆதரவின் கீழ் 3—3—35. 6உகளில் சோசலை தாஸர் ஸ்ரீமான் வெங்கடசுப்பாசாரியாரால் இரண்டு ஹரிகதைகளும் 10, 17, 31, 27—4—35 உகளில் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணசாரியாரால் யுக்திமல்லிகா உபன்யாஸங்களும் 23உ ஸ்ரீமான் தெ. கிருஷ்ணசாரியாரால் ஸ்ரீ வியாஸராஜர் சரித்திரத்தைப்பற்றியும், 24உ ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணசாரியாரால் ஸ்ரீ வாதிராஜர் சரித்திரத்தைப்பற்றியும், உபன்யாஸங்களும் நடந்ததாயும் பொள்ளாச்சி ஸ்ரீ சீதாராமஸ்வாமிக்கு 4உ முதல் 15 தேதிவரையில் ஸ்ரீராமநவமி உற்சவம் வெகு விமரிசையாய் அநேக சங்கீதக் கச்சேரிகள் ஹரிகதைகள் புதிதாய் செய்யப்பட்டதான அநேக வாகனங்கள் ரதோற்சவம், புஷ்பப்பல்லக்கு, ஸஹஸ்ர சங்காபிஷேகம், பிராம்மண சந்தர்பணை இவைகளுடன் நடத்தப்பட்டதென்றும், சுமார் ஆயிரம் ஜனங்கள் கூடியிருந்தனரென்றும் ஸ்ரீமான் P. G. வெங்கடசுப்புராவ் அறிவிக்கிறார்.

பவானியில் சதுர்புஜ ஸ்ரீ ஆஞ்ஜநேயர் சமேத ஸ்ரீ ஸீதா சமேத ஸ்ரீபட்டாபிராமருக்கு வழக்கப்படி ஸ்ரீராமநவமிஉற்சவம் 8உமுதல் 15உ வரையில் கல்யாண உற்சவம் ரதோற்சவம் தெப்போற்சவம் முதலியவை பிராம்மண சந்தர்பணைகளுடனும் பல சங்கீதக் கச்சேரிகள் ஹரிகதைகள் ஸ்ரீமத்வஸித்தாந்த உபன்யாஸங்கள் இவைகளுடன் நடத்தப்பட்டதென்றும் சுமார் ஆயிரம் மாத்வர்கள் கூடியிருந்தனரென்றும் ஸ்ரீமான் D. S. நாகராஜராவ் அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமன் மத்வஸித்தாந்த ஸபையின் கீழ் 17—3—35 ஸ்ரீமான் P. R. சஞ்சீவி ராயரால் பதிசேவை என்பதைப்பற்றியும் 24, 31உகளில் கீதா உபயாஸமும் 4—4—35 உயன்று பஞ்சாங்க சிரவணமும் ஸ்ரீமான் யதுநாதாசாரியால் நடத்தப்பட்டதென்றும். ஸ்ரீமான் M. S பத்மநாபராவ் அறிவிக்கிறார்.

மதராஸ் மாத்வா அஸோஸியேஷனின் ஒன்பதாவது வருஷாந்தர உற்சவமும் யுகாதி பண்டிகைக் கொண்டாட்டமும் 4—4—35உயன்று ரிடையர்ட் சப்-ஜட்ஜ் ஸ்ரீமான் K. L. வெங்கடராயரின் அக்கிராஸனத்தின்கீழ் N. சாமராவ் ஸ்கூல் கட்டிடத்தில் வெகு சிறப்பாய் நடந்த[illegible]



தென்றும், ஸ்ரீமான் வையூர் ஸ்ரீனிவாசாசாரியார் பஞ்சாங்கபடனம் செய்தார்என்றும், இச்சபையின் ஆரம்பமுதற்கொண்டு நடத்திவந்த காரியங்களை காரியதரிசி ஸ்ரீமான் A. நரஸிங்கராவ் சுருங்கச் சொல்லுகையில் வசூலான சுமார் 4000 ரூபாயில் பெரும்பாகம் பாடசாலைக்கும் வித்யார்த்திகளுக்கும் செலவழிக்கப்பட்டிருப்பதாயும், ஸ்ரீமான் ராவ் சாகிப் C. புருஷோத்தமராயரின் பேருதவியால் தற்போது ரூ. 60 கையிருப்பு இருப்பதாயும் அறிவிக்கப்பட்டதென்றும் 7உயன்று மேற்கண்ட ஸ்ரீமான் A. நரஸிங்கராயரின் வீட்டுக் கட்டிடத்தில் ஸ்ரீமான் ராவ் சாகிப் T. K. ஹனுமந்தராயர் M. E. S. அவர்களால் ஸ்ரீமான் ஆரணி சுப்புராயாவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் மாத்வர்களின் பாடசாலையும் வாசகசாலையும் திறந்துவைக்கப்பட்டு அரியதொரு உபன்யாஸம் செய்யப்பட்டதென்றும் ஹிந்து ஆந்திரப்பத்திரிகை மாத்வமித்திரன் பத்திரிகைகள் படிக்கவைக்கப்பட்டிருக்குமென்றும் அறிவிக்கப்பட்டதென்று அச்சபையின் காரியதரிசி விஸ்தாரமான ரிபோர்ட்டை எழுதியனுப்பியுள்ளார்.

## விசேஷ தினங்கள்.

### வைசாக மாஸம்.

| | | |
|---|---|---|
| 5—5—35 | பானுவாரம் | அக்ஷயத்திருதியை. |
| 14—5—35 | மங்களவாரம் | ஏகாதசி உப. |
| 16—5—35 | குருவாரம் | நரஸிம்ஹ ஜயந்தி. |
| 18—5—35 | சனிவாரம் | பௌர்ணமி, விஷ்ணுப உப. |
| | | வைசாக ஸ்நானம் பூர்த்தி. |
| [illegible]—5—35 | ,, | சிரவணம் உப. இல்லை. விஷ்ணுப உப. |
| [illegible] | மங்களவாரம் | ஏகாதசி உப [இல்லை. |
| 31—5—35 | சுக்ரவாரம் | கிருத்திகை உப. தர்சம். |
| 1—6—35 | சனிவாரம் | விஷ்ணுப. உப. |

## மாத்வமித்திரன் காலண்டர்.

அழுத்தமான ஆப் ஸேனல் காகிதத்தில் பெரிய அளவில் தலைப்பில் ஸ்ரீ குரு ராகவேந்திர ஸ்வாமிகளின் அழகிய ஆப் டோன் பிளாக்குடன் அச்சிடப்பட்டுவரும் இவ்வருஷத்திய மாத்வமித்திரன் ஷீட் காலண்டர்கள் அச்சாகி முடிந்து அடுத்த வாரத்திற்குள் எமக்கு கிடைத்திருக்கும் எல்லா ஆர்டர்களுக்கும் அனுப்பி விடக்கூடும். எதிர்பாராதபடி ஆர்டர்கள் ஏராளமாய் இருப்பதால் பாக்கியுள்ள சொற்ப காபிகளை தேவையுள்ள எமது மாத்வமித்திரன் பத்திரிகை சந்தாதாரர்கள் அலஸ்யம் செய்

யாமல் உடனே முந்திக்கொண்டு கிரயத்தொகையை அனுப்பிப் பெறுவது நலம். பிந்தி ஏமாந்துபோய் கடுமொழிகளை உபயோகிப்பதில் பயனில்லை. தபாற்செலவுடன் பிரதி 1-க்கு 0 2 9
[ப—ர்

# சங்கரலீலா விலாஸம்.

(முன் 283-ம் பக்கம் தொடர்ச்சி)

ப்ரம்மத்திற்கு லக்ஷணங்கள் எவை என்ற ப்ரச்னத்திற்கு அத்வைத மதத்தில் பதில் சொல்ல முடியாது. அசக்யம் தான். ஸ்ருஷ்டி செய்தல் முதலியவை ப்ரம்மத்தின் லக்ஷணமென்று ஸூத்ரகாரர் சொல்லியிருக்கிறார்; ஆகையால் ப்ரம்மம் நிர்குணன் ஆகமாட்டான் என்று கண்டனம் கிளம்பவும், சங்கராசாரியார் ஒரேஒரு வார்த்தையைச் சொன்னார். எங்கள் ப்ரம்மத்திற்கு ஸ்வரூப லக்ஷணத்தை ஒப்புக்கொண்டால் நிர்குணத்வம் போய்விடும் தான். நாம் அப்படிச் செய்வதில்லை. ப்ரம்மத்திற்கு லக்ஷணங்கள் உண்டே உண்டு ஆனால் அவை தடஸ்த லக்ஷணங்கள் என்றார். தத்வக்ஞான சூன்யர்களான மூடர்கள் இதைக்கேட்டு விட்டு இது ஓர் விலையில்லா பதகமென்றும் இதனால் பரப்ரம்மத்திற்கு லக்ஷணங்களைச் சொல்லிவிட்டதாயும் இதனால் ஜன்மாத்யஸ்யத: என்ற ஸூத்ரம் அனுகூலமாய் ஆகிவிட்டதாயும் ப்ரம்மத்திற்குள்ள லக்ஷணமில்லாமை என்பதும் விட்டுவிட்டதாய் ஆகவில்லை என்றும் எண்ணினார்கள். உண்மையில் இது ஓர் இமிடேஷன் கல் தான். பிரம்மத்திற்கு ஸ்ருஷ்டி கர்த்ருத்வாதிகள் தடஸ்த லக்ஷணங்களென்றால் லக்ஷ்யத்தின் ஸம்பந்தமில்லாத பஹிர்பூதமான லக்ஷணங்கள் என்று அர்த்தம்; அதாவது லக்ஷணங்களாய் இல்லாத லக்ஷணங்கள் என்று ஆகிறது. இதனால் லக்ஷணமில்லை என்று தான் ஏற்படுகிறது. சுருங்கச்சொல்லின் தடஸ்தமான லக்ஷணம் உண்டு என்றால் லக்ஷணமில்லை என்றுதான் சுத்தமான அர்த்தம். ஆகவே இது மற்றொருவகை வஞ்சனை.

(7) இந்த எல்லா கல்பனைகளுக்கும் மீறிய மற்றொரு கல்பனை சங்கராசாரியாருக்கு தெரிந்திருக்கிறது. பிரம்மம் ஒன்று தானே ஸத்யம் என்று உங்கள் மதம். அதனால் ஜகத்து இல்லவே இல்லை என்று ஏற்படுகிறதே என்று த்வைதிகள் கண்டனத்தைச் சொன்னால் ஆமாம் இல்லவே இல்லைதான். இருப்பதாய்ச் சொன்னவர் யார் என்று பதில் சொல்வார். சிலசமயம் அவர் மனம் திருப்தியடையாமல் இந்த விதமாகவும் ஸமாதானம் சொல்வார். பாரமார்த்திகம் வியாவஹாரிகம் என்று இருவகை விவக்ஷை உண்டு. வியாவகாரிகை விவக்ஷைப்படி ஜகத்து இருக்கவே இருக்கிறது. பாரமார்த்திக விவக்ஷைப்படியோ ஜகத்து இல்லை தான் என்று பதில் சொல்லிவிட்டு தன் கல்பனையின் ஆச்சர்யத்தை தானே கண்டு ஆனந்தப்பட்டு உட்காருவார்.

(தொடரும்)

## மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

**ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்**—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் கண்டோர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

**ஸ்ரீராகவேந்திர ஸ்தோத்திரம்:**— தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

**ஸ்ரீவாயுஸ்துதி:**—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது, வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

**த்வைத்மத விளக்கம்:**—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

**கும்பகோண மகாத்மியம்:**—(தமிழ்) அணா 4: தபாற்கூலி பை 6.

**திருவசரித்திர நாடகம்:**— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

**கீதாதத்வம்:**— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதராக்ஷாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0.

ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்துக்கு போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3 Regd. No M. 2419

# டி. எஸ். ஆர்.

## அண்டு

# கம்பெனி,

## கும்பகோணம்.

ஸ்தாபிதம்
**1909**

தந்திவிலாஸம்
"கோகுல்"

எங்கள் வாஸனாதிரவியசாலையில் தயாரித்து விற்பனைக்கு தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணாம்பு
வாஸனைப் புகையிலை
ஸ்னோப்பவுடர்
கேஸர் பவுடர்
அம்பர், அரகஜா
தசாங்கம்

பலகாய்கறி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல்
பற்பொடி [தைலம்
ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,
அரக்கீரைவிதைத் தைலம்,
மற்றும் அநேகவாஸனை சாமான்களும் கிடைக்கும்.
கேட்லாக்குக்கு எழுதுங்கள்.